கையேடு

# வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த அய்.நாவின் கொள்கைகளும் வழிகாட்டுதல்களும்

மக்கள் கண்காணிப்பகம்

உறைவிடம் மற்றும்
நிலவுரிமைக்கான கூட்டுப்பணி

உறைவிடம் மற்றும் நிலவுரிமைக்கான கூட்டுப்பணி எனும் இரு அமைப்புகளும் அய்க்கிய

நாட்டவையின் வளர்ச்சி தொடர்பான வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த அடிப்படை கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை மக்களுக்குப் பிரச்சாரம் மூலம் கொண்டு செல்லும் வகையில் உருவாக்கப்பட்டதே இக்கையேடு. கொள்கை வகுப்போர், மக்கள் இயக்கங்கள், மற்றும் ஏனைய நிறுவனங்களிடம் இவ்வழிகாட்டல்களைக் கொண்டு செல்லல், உள்ளாட்சி, மாநில அரசுகள் மற்றும் நடுவரசுகள் இவ்வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்த வைத்தல் என்பது இவ்வமைப்பின் நோக்கமாகும்.

மக்களிடம் இவ்வழிகாட்டுதல்கள் பற்றிய விழிப்புணர்வைச் சமூகக் குழுக்களின் தலையீடுகள், பொது நிகழ்வுகள், கலந்துரையாடல்கள், வெளியீடுகள் மூலம் கொண்டு செல்லல்.

*For more information on the Campaign, contact:*


**Housing and Land Rights Network:**

G-18/1 Nizamuddin West

New Delhi – 110013

+91-11-4054-1680

contact@hlrn.org.in

www.hlrn.org.in

வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த அய்.நாவின் கொள்கைகளும் வழிகாட்டுதல்களும்

**– ஒரு கையேடு**

A HANDBOOK ON

# UN Basic Principles and Guidelines on Development-based Evictions and Displacement

PEOPLE'S WATCH

HOUSING AND LAND RIGHTS NETWORK

**Title** : A Handbook on UN Basic Principles and Guidelines on Development-based Evictions and Displacement

**Translated by** : Dr. I.Devasahayam

**First Edition** : December 2010

**Published by** : People's Watch
Publication Unit
6, Vallabai Road,
Madurai 625 002.
E.mail: info@pwtn.org
Website: www.peopleswatch.org
Tel: +91-452-2539520
Fax: +91-452-2539520

**Printed at** : Anto Art Crafts, Sivakasi

## உள்ளடக்கம்

வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும்
கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு
குறித்த அய்.நாவின் கொள்கைகளும்
வழிகாட்டுதல்களும்

**- ஒரு கையேடு**


| | |
|---|---|
| முன்னுரை | 1-12 |
| தொகுப்புரை | 13-21 |
| அய்.நாவின் வழிகாட்டுதல்கள் | 21-42 |
| இறுதிக் குறிப்புகள் | 43-44 |

# ▨ உறைவிட உரிமை ▨

## I. முன்னுரை

### உறைவிட உரிமை மனித உரிமையே

உலகில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் ஏதோ ஒரு வகையிலான உறைவிடத்தை அமைத்து வாழ்கின்றனர் எனினும், உலக மக்கள் தொகையின் பாதி மக்கள் உறைவிடம் அல்லது உறைவிடத்திற்கான அடிப்படை வசதிகளோ கொண்டு வாழ்வதாகச் சொல்ல முடியாது. அகில உலக மனித உரிமைகள் சட்டம் மற்றும் இதுபற்றிய விளக்கங்களின்படி உறைவிடம் என்பது சுவர்களோடும், கூரைகளோடும் கூடிய ஒரு கட்டுமானம் மட்டுமல்ல; இதனையும் தாண்டிய விரிவான ஒரு கருத்தாக்கம் இது. அதாவது ஒரு மனிதன் பாதுகாப்போடு வாழ்வதற்கான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது, போதுமான உறைவிடம் என்பது நாம் அடைய விரும்பும் நோக்கு மட்டுமல்ல. இது மானிடரின் அடிப்படை உரிமையுமாகும். இக்கருத்தை 1948-ல் உருவான சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் உறுதி செய்துள்ளது. மக்களின் தரமான வாழ்விற்குப் போதிய உறைவிடம் அடிப்படை தேவை என்பதால் இது மனித உரிமைக் கூறுகளுள் பிரிக்கவியலா ஒன்றாகிறது.

"ஒவ்வொருவரும் உணவு, வீடு, உடை, மருத்துவம், சமூகப்பணி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கூடிய உரிமையுடையவர்கள். வேலையின்மை, நோய், இயலாமை, விதவை நிலை, முதுமை, வாழ்வதற்கான அடிப்படை வசதியின்மை போன்ற நிலை களில் சமூகப் பாதுகாப்பைப் பெறும் உரிமையுண்டு" சர்வதேச மனித

உரிமைப் பிரகடனத்தின் பிரிவு -25 மேற்கண்ட பிரகடனத்தின் அடிப்படையை 1966-ல் உருவான சர்வதேச பொருளாதார, கலாச்சார உரிமைகளுக்கான ஒப்பந்தம், உறைவிடத்திற்கான உரிமையை மறு உறுதி செய்தது. இந்த ஒப்பந்தத்தின் பிரிவு 11.1-ன் படி ‘‘உறுப்பு நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கண்டுள்ள சரத்துகளை ஏற்றுக்கொள்வதோடு, ஒவ்வொருவருக்கும் தரமான வாழ்வு வாழவும் குடும்பத்தை அமைத்துக் கொள்ளவும், போதிய உணவு, உடை, உறைவிடத்தைப் பெறவும், வாழ்வுச் சூழலை வளர்த்துக் கொள்ளவும் உரிமையுண்டு’’ என்று அறிக்கையிட்டது.

‘‘ஒவ்வொரு ஆண், பெண், இளைஞன், குழந்தைக்கும் பாதுகாப்போடு கூடிய வீட்டிலும், சமூகத்திலும், அமைதியாகவும், மாண்போடும் வாழும் உரிமையுண்டு’’ என போதுமான உறைவிடத்திற்கான அய்நாவின் சிறப்புச் செய்தியாளர் உறைவிடவுரிமைக்கு விளக்கம் தருகிறார்.

போதுமான உறைவிடம் பிரிக்க இயலா மனித உரிமையாகிறபோது, இவ்வுரிமை மானுடரின் மாண்போடு தொடர்புடையதாகிறது. அது மட்டுமல்ல; உறைவிட உரிமையோடு நிலத்திற்கான உரிமையும், அடிப்படை உரிமையாகிறது. உறைவிடம், நிலம் எனும் உரிமைகள் இயல்பாகவே உணவு, வேலை, நல வாழ்வு, உறைவிடம் மற்றும் தனி நபர் பாதுகாப்புரிமைகளும் ஒன்றோடு ஒன்று பிரிக்கவியலா உரிமைகளாகின்றன.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், உடன்படிக்கைகள் பல இந்திய அரசால் ஏற்பு செய்யப்பட்டிருந்தாலும், இவைகளுள் உறைவிட உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற கட்டாயமிருந்தாலும், இந்தியாவின் நகரங்களில் மற்றும் ஊரகங்களில் மீறப்படும் இவ்வுரிமைகள் கண்டு கொள்ளாமலேயே விடப்பட்டுள்ளன.

2001 இந்திய மக்கள் தொகை கணக்கின்படி, இந்திய நகர மக்கள் தொகையில் 23.1 சதவீதம் பேர் அதாவது, 286 மில்லியன் பேர் சேரிகளில் வாழ்கின்றனர். இவ்வெண்ணிக்கை இன்னும் அதிகமாகக் கூட இருக்கக் கூடும். ஏனென்றால் இவ்வாய்வில் 607 நகரங்கள் மட்டுமே ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன. குடிமைச் சமூகங்களின் ஆய்வுப்படி, மும்பையின் 60 சதவீத மக்களும் டெல்லியின் 50 சதவீத மக்களும்

நகர்ப்புற சேரிகளில்தான் வாழ்கின்றனர். இவ்வுறைவிடங்களில் வாழும் மக்களின் வாழ்வுத்தரம் பற்றிய ஆய்வு செய்தால் இவ்வெண்ணிக்கை இன்னும் அதிகமாகலாம். இந்நாட்டின் நகர்ப்புறங்களில் வாழும் பெரும் பான்மை மக்களுக்கு உறைவிட உரிமை மறுக்கப்பட்டிருப்பதே உண்மை. ஊரகங்களில் இந்நிலைமை மிக வருத்தம் தருவதாயுள்ளது.

பத்தாம் அய்ந்தாண்டுத் திட்ட இறுதியில், நகர்ப்புற உறைவிடங்களின் பற்றாக்குறை 24.7 மில்லியன். அதே வேளை பதினொன்றாம் அய்ந்தாண்டுத் திட்ட (2007-2012) இறுதியில் இப்பற்றாக்குறை 26.55 மில்லியனாக இருக்கலாம் என கணிக்கப்படுகிறது. 99 சதவீத இப்பற்றாக் குறை அல்லது உறைவிடங்களின்மை என்பன பொருளாதார அடிப்படை யில் பின்தங்கியோர்க்கும் குறைந்த வருமானம் பெறுவோர்க்கும் என்பது தான் இங்கு கவலை தரும் விஷயமாகும். 2007-2012 ஆம் ஆண்டுகளில் மொத்த உறைவிட பற்றாக்குறை 47.43 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 90 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவராகவே இருப்பர்.

## இந்திய அரசியல் சாசனத்தில் உறைவிடப் பாதுகாப்பு

சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம், நீதி எனும் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டதே நம் இந்திய அரசியல் சாசனம். இந்திய அரசியல் சாசனம் உறைவிட உரிமையை அடிப்படை உரிமையாக வெளிப்படையாகக் கொள்ளாவிட்டாலும், ஏற்கனவே அரசியல் சாசன உள்ளடக்கமாகிய அடிப்படை உரிமைகளிலும் வழிகாட்டும் நெறிமுறைகளிலும் இவ்வுரிமை உள்ளடங்கியுள்ளது.

இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு 21 வாழ்வுரிமையைப் பற்றிப் பேசு கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு உச்ச நீதிமன்றம் உறைவிடத்திற் கான உரிமையை, அடிப்படை உரிமையாக அறிவித்துள்ளது. ('வாழ்வு மற்றும் தனிமனித சுதந்திரத்தை நிறுவப்பட்ட சட்டம் தவிர்த்து பறிக்கும் உரிமை எவர்க்கும் இல்லை') நீதிமன்றத் தீர்ப்புகள் பல உறைவிட உரிமையை மனித உரிமை என்றே தீர்ப்பளித்துள்ளன.

## இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகள்:

- சட்டத்தின் முன் அனைவரும் சமம். (பிரிவு 14)
- மதம், இனம், சாதி, பால், பிறப்பிட அடிப்படையில் பாகுபாடு காட்டாமை (பிரிவு 15 (1)
- பெண்கள், குழந்தைகளுக்கு நேர்மறை பாகுபாட்டின் அடிப்படையில் சிறப்புச் சலுகை (பிரிவு 15 (3))
- அரசுத்துறையில் வேலைவாய்ப்பு மற்றும் நியமனங்களில் சமவாய்ப்பு (பிரிவு 16)
- இந்தியா முழுவதும் நடமாடும் உரிமை. (பிரிவு 19 (1) (d))
- இந்தியப் பகுதியில் எவ்விடத்திலும் குடியிருக்க சுதந்திரம் உண்டு. (பிரிவு 19 (1) (e))
- விரும்பிய தொழிலைச் செய்ய, வணிகம் மேற்கொள்ள குடிமக்களுக்கு உரிமையுண்டு 19 (1) (g)
- வாழ்வு, தனிநபர் சுதந்திரத்திற்கான உரிமை. (பிரிவு 21)

இவ்வுரிமைகளை ஆழமாக நோக்குவோர் எவர்க்கும் உறைவிட உரிமைகள், இவ்வுரிமைகளில் உள்ளடங்கியிருப்பதை உணர முடியும்.

## சர்வதேசச் சட்டங்களில் உறைவிட உரிமைப் பாதுகாப்பு

போதுமான உறைவிடத்திற்கான உரிமைகளை உறுப்பு அரசுகள் பாதுகாக்கும் வகை செய்ய வேண்டுவதற்கான சர்வதேச அளவிலான மனித உரிமைச் சட்டங்கள் உருவாகியுள்ளன. சர்வதேச மனித உரிமைப் பிரகடனம், சர்வதேச கலாச் சார, பொருளாதார, சமூக உரிமைகளுக்கான ஒப்பந்தம் (பிரிவு 11.1), குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை (பிரிவு 27.3), பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கு எதிரான உடன்படிக்கை (14.2) இனப் பாகுபாட்டிற்கு எதிரான உடன்படிக்கை பிரிவு (5) ஆகிய சர்வதேச உடன் படிக்கைகளில் உறைவிடத்திற்கான உரிமைகள் தரப்பட்டுள்ளன.

பொருளாதார, சமூக, கலாச்சார சர்வதேச உடன்படிக்கை பிரிவு 11.1-ல் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உறைவிட உரிமைக்கான இலக்கு அல்லது நோக்கம் பொருளாதார, கலாச்சார, சமூக உரிமைகளுக்கான குழுவாலும் *(CESCR)* விளக்கம் தரப்பட்டுள்ளது. போதுமான உட்கட்டுமான வசதியுடைய உறைவிட உரிமை என்பது கீழ்க்கண்ட அடிப்படை உட்கூறுகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

- சட்டப்பூர்வ பாதுகாப்புக்கான காலம்.
- எளிதில் கிடைக்கப்பெறும் சேவை.
- வாய்ப்பைப் பெறும் தகுதியுடைமை.
- எளிதில் எட்டும் தன்மை.
- குடியிருப்புக்கான தகுதி.
- குடியிருக்கும் இடம்.
- கலாச்சாரச் சூழமைவு

சூழமைவு உள்ளடக்கிய கூறுகளை பல்வேறு குடிமைச் சமூக அமைப்புகளும், அய்நாவின் உறைவிட உரிமைகளுக்கான சிறப்புச் செய்தியாளரும் சற்று விரிவுபடுத்தியுள்ளனர். பாதுகாப்பு,பங்கேற்பு,தகவல்,நிலம்,நீர் மற்றும் ஏனைய இயற்கை வளங்களை எளிதில் எட்டும் வசதி, உடைமையை அபகரித்தலிலிருந்து சுதந்திரம், சேதம் விளைவித்தல், அழித்தல் மாற்றுக் குடியிருப்பு, மீட்டெடுத்தல், இழப்பீடு, தீர்வுக்கான எளிய வழி, கல்விக்கான வாய்ப்பு, அதிகாரப்படுத்துதல் பெண்கள் மீதான வன்முறையிலிருந்து விடுதலை போன்ற அம்சங்கள் போன்றனவெல்லாம் சூழமைவுள் அடங்கும்.

## வாழிடத்திலிருந்து கட்டாயமாக வெளியேற்றுதல் உறைவிடம் மற்றும் நிலவுரிமைகளை மீறலே

1997-ல் சர்வதேச பொருளாதார, சமூகக் கலாச்சார உடன்படிக்கையில் வைக்கப்பட்ட பொது விளக்கத்தில் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது: “நிரந்தர அடிப்படையிலோ, தற்காலிகமாகவோ ஒரு தனி நபர், குடும்பம் அல்லது சமூகத்தை அவர்கள் வாழும் உறைவிடம் அல்லது நிலத்திலிருந்து போதிய சட்டப்பாதுகாப்பு எதுவுமின்றி வெளியேற்றக்கூடாது.”

கட்டாய வெளியேற்றம் என்பது உறைவிட உரிமையை மீறுவதற்கான முதல்நிலை காரணங்களை உள்ளடக்கியதாகும். இச்செயல் உறைவிட மறுப்புக்கும் இட்டுச் செல்வதாகும். அய்நாவின் மனித உரிமைகள் ஆணையத் தீர்மானங்கள் 1993/77 மற்றும் 2004/28-லும் இவ்வுரிமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

பொருளாதார சமூக, பொது கலாச்சார உரிமைகளுக்கான உடன் படிக்கை விளக்கம் 7-ம் உறைவிட உரிமைகளை உறுப்பு நாடுகள் உறுதி செய்யக் கோருகிறது. ''சட்டரீதியான நடவடிக்கைகள் உறைவிட உரிமை மீறலைத் தடுக்க உதவலாம். சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டாயமாக வெளி யேற்றும் தனி மனிதர்கள் அல்லது அமைப்புகளைத் தேவையானால் தண்டிக்கப்படலாம்.''

கடந்த சில ஆண்டுகளாக உலகெங்கும் வரலாறு காணா வகையில் கட்டாய வெளியேற்றங்கள் நடைபெறுகின்றன. வளர்ச்சி என்ற பெயரில், உட்கட்டுமான வசதிகளைப் பெருக்குவது என்பதன் பெயரில் அணைகள், சுரங்கங்கள், துறைமுகங்கள், நகர்களை அழகுபடுத்துதல், விரிவாக்கம், விளையாட்டுக்கள், தொழில் வளர்ச்சி, விளைநிலங்களை தொழில் வளர்ச்சிக்கு அபகரித்தல் என்பதன் பெயரிலெல்லாம் தனி மனிதர்களும், காலங்காலமாகக் குடியிருக்கும் சமூகங்களும் அப்புறப்படுத்தப் படுகின்றனர். அப்புறப்படுத்தப்பெறும் இம்மக்கள் அல்லது தனி மனிதர்களுக்குப் போதுமான மறுவாழ்வுக்கான உத்தரவாதமின்மை யால் இவர்கள் வாழ்வதற்குரிய வீடுகளை மட்டுமல்லாமல், வாழ்வாதாரங் களையும் இழந்து விடுகின்றனர்.

கட்டாய வெளியேற்றம் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமைகளான தனி மனித பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு எனும் உரிமைகளையும் மீறுதற்கு காரணியாகின்றது. இவர்கள் உறைவிட உரிமைகளோடு தொடர்புடைய, உரிமைகளான சுகாதாரம், உணவு, நீர், வாழ்வாதாரம், கல்வி, வன்கொடுமையிலிருந்து சுதந்திரம், மனிதாபிமான முறையில் நடத்துதல், நடமாடும் உரிமை போன்றவைகளும் மீறப்படுகின்றன.

கட்டாய வெளியேற்றங்களை நடத்தும் அதிகாரிகள், பாதுகாப்புக் காலத்தையும் வெளியேற்றப்படும் மக்களின் சுதந்திரத்தையும் மீறுகின்றனர். இதனால் மக்கள் சமூகத்தினின்று பெறும் ஏனைய வாய்ப்புகளையும், சேவைகளையும் இழக்கின்றனர். தகவல், திறன், திறன் வளர்த்தல், பங்கேற்பு, சுய வெளிப்பாடு, நஷ்ட ஈடு, இழப்பு, பாதுகாப்பு, அந்தரங்கம் போன்ற உரிமைகளும் மிகமோசமாக மீறப்படுகின்றன. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களில் தரப்படும் அனைத்து உரிமைகளும் தாறுமாறாக மீறப்படுகின்றன.

கட்டாய வெளியேற்றம் வீடுகளை இழக்கச் செய்வதோடு, இவர்களைத் திக்கற்றவர்களாகவும் மாற்றிவிடுகிறது. வாழ்வாதாரங்களைப் பெறும் வாய்ப்பற்றவர்களாகச் சட்டரீதியான நிவாரணங்களைப் பெறும் தகுதியற்றவர்களாக வாழ வேண்டியவராகின்றனர். இக்கட்டாய வெளியேற்றம் இவர்களின் உளவியலைப் பாதித்துவிடுகிறது. குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள், ஏற்கனவே வறுமையில் வாழ்வோர் பூர்வீகக் குடிமக்கள், சிறுபான்மையோர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை மிகவும் பாதிப்புக்குள்ளாக்குகிறது.

கட்டாய வெளியேற்றம் ஒரு தவிர்க்க இயலா சூழலில் நிகழ்த்த வேண்டியதிருக்கலாம். அவ்வாறு நிகழ்த்துகின்ற போது, சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மீறப்படாமலிருக்குமாறு பார்த்துக் கொள்ளல் அவசியமாகிறது.

## வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த அய்.நாவின் கொள்கைகளும் வழிகாட்டுதல்களும்

அய்நாவின் உறைவிட உரிமைக்கான சிறப்பு அறிக்கையாளர், செர்மனி குடியரசின் வெளிநாட்டு அலுவலகம், செர்மன் மனித உரிமைகளுக்கான நிறுவனம், இவைகளோடு இணைந்து, சூன் மாதம் 2005-ல் சர்வதேச பாசறை ஒன்றை பெர்லினில் நடத்தினார். அரசுகளும், சர்வதேசச் சமூகங்களும் வெளியேற்றத்தின் போது கடைபிடிக்க வேண்டிய கோட்பாடுகளும், வழிமுறைகளும் என்னவாக இருக்கவேண்டும் என்பதைத் தயாரிப்பதே இம்மாநாட்டின் நோக்கமாகும். வளர்ச்சி அடிப்படையில் செய்யப்படும்

வெளியேற்றங்களும் இடம் பெயரலும் நிகழும்போது கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை கோட்டுபாடுகளும் வழிகாட்டுதல்களும் இப்பாசறையில் உருவானவையே. சூன் 2007-ல் உறைவிட உரிமைக்கான அய்நாவின் சிறப்பு அறிக்கையாளர், இவ்வழி காட்டுதல்களை, மனித உரிமை கவுன் சிலிடம் சமர்ப்பிக்கவே டிசம்பர் 2007-ல் இது முறைப்படி ஏற்கப்பட்டது.

## வழிகாட்டுதல்களின் சிறப்புக் கூறுகள்

1997-ம் ஆண்டிலிருந்து கிடைக்கப் பெற்ற அனுபவங்களால் இவ்வழி காட்டுதல்களில் பல புதிய உத்திகளையும் நடைமுறைகளையும் இணைக்க முடிந்தது.

இவ்வழிகாட்டுதல்களில் வளர்ச்சித் திட்டங்கள், ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் இடம் பெயரலின் விளைவால் உருவாகும் கட்டாய வெளி யேற்றத்தின் விளைவுகளையும் கவனத்தில் கொள்ளமுடிந்தது. வளர்ச்சித் திட்டங்களால் உருவாகும் இடம் பெயரல் பற்றி மனித உரிமைகள் பற்றிய விரிவான வழிகாட்டுதல்களும் உருவாகின. *(E/CN 4/ Sub. 2/1997 annex)* இவை: சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் அடிப்படையிலும் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான குழு பொது விளக்கம் 4 (1991) பொது விளக்கம் 7 (1997) அடிப்படையிலும் உள்நாட்டு இடம் பெயரல் பற்றிய வழிகாட்டுதல்கள் அடிப்படையிலும் *(I/CN.4/1998/53/add.2),* தீர்வு பெறும் உரிமைக்கான கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள், பாதிக்கப்பட் டோர்க்கு எதிரான சர்வதேச மனிதாபிமான சட்டம், மற்றும் மனித உரிமைச் சட்டம் அய்நாவின் பொதுச்சபை ஏற்றுக் கொண்ட தீர்மானம் 60/147 புலம் பெயர்ந்த மனிதர்கள், அகதிகளுக்கான உறைவிடத்திற்கான உரிமைகளும் இழந்த சொத்துக்களை மீட்டளிப்பிற்கான பெறுதற்கான உரிமைகளும் கோட்பாடுகளும் (பார்க்க *E/CN.4/Sub.2/2005/17* மேலும் 1)

## இவ்வழிகாட்டுதல்கள்

- கட்டாய வெளியேற்றம் பற்றிய விளக்கம் (புத்தி 4-8)
- தவிர்க்க இயலா சூழலில் நடக்கும் இடம் பெயரலின் போது கைக்கொள்ள வேண்டிய உறுதியான நடைமுறை விதிகளும், நியாயங்களும், நடை முறை ஒழுங்குகளும் (புத்தி 21)

- கட்டாய வெளியேற்றத்தின் போது அல்லது வெளியேற்றத்தின் பிறகு, மக்களின் மனித உரிமைகளைக் காக்கின்ற வகையில் எடுக்க வேண்டிய வழிமுறைகள் (பத்திகள் 37-58)

- இடம் பெயர்வதற்கு முன்பு, வெளியேற்றத்தால் ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் வகையில் "வெளியேற்றத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றிய மதிப்பீடு" ஒன்று செய்யப்படவேண்டும். (பத்திகள் 32-33)

- இழப்பீடு பெறுதற்கான முன்னேற்பாடு, மீட்டளிப்பு, போதுமான மாற்று நிவாரண வழிகள் போன்ற மனித உரிமைத் தரங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல். (பத்திகள் 42-60-63)

- ஏனைய பேரிடர்களால் ஏற்படும் இடப்பெயர்வுகளைக் களைய வேண்டிய முன்னேற்பாடுகள் (பத்திகள் 52-55)

- மிக மோசமாக இடம் பெயரலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மறு குடியிருப்புக்கான உரிமை அடிப்படையில் போதுமான வீட்டு வசதிகளை ஏற்படுத்துதல் (பத்திகள் 16-52-56)

- நிலம் மற்றும் வீட்டிற்கான போதுமான உரிமங்கள் வழங்கப் பெறாதோர் அனைவர்க்கும் அரசுகள் உடனடியாகப் பாதுகாப்புக் காலத்தை உறுதி செய்யவேண்டும். (பத்திகள் 23,25)

- பாலியல் சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். குறிப்பாக பெண்கள் நலத்திற்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். (பத்திகள் 7,15,26,29,37,34,38,39,47,50,53,54,57 & 58)

- குழந்தை உரிமைகளையும் வீட்டுரிமைப் பாதுகாப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும். (பத்திகள் 21,31,33,47,50,52,54,56)

- கட்டாய வெளியேற்றத்தால் ஏற்படும் பல்வேறு வகை பாதிப்புகளை கவனத்தில் கொள்ளல். குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள், மாற்றுத் திறனாளிகள், சிறுபான்மையோர், வரலாற்றுப் பூர்வமாகப் பாகுபடுத்தப்பட்ட மக்கள், முதியோர், ஏனையோர்களின் வேறுபட்ட பாதிப்புகளை கவனத்தில் கொண்டு இவர்தம் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். (பத்திகள் 21, 29, 31, 33, 38, 39, 54, 57)

- தொடர்புடைய மனித உரிமைகளைப் பாதுகாக்க அழைப்பு
  - வேலைக்கான உரிமையும், வாழ்வாதாரத்திற்கான உரிமையும் (பத்திகள் 43,52,62)
  - நிலத்திற்கான உரிமை (பத்திகள் 16,22,25,26,30,43,56,60, 61,63,71)
  - உணவிற்கான உரிமை (பத்திகள் 52,57)
  - நலவாழ்விற்கான உரிமை (பத்திகள் 16,54,57,60,68)
  - கல்விக்கான உரிமை (பத்திகள் 16,52,57,60,63)
  - அரசு அல்லா அமைப்புகளின் கடமைகள் (பத்திகள் 11,71-73)
- சந்தைப் பொருளாதாரம் வளர்ச்சி என்ற பெயரில் குறைந்த வருவாய் பெறும் மக்களை, ஒடுக்கப்பட்ட மக்களைக் கட்டாயமாக வெளியேற்றம் செய்யும் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க அரசுகள் உறுதியேற்க வேண்டும். (பத்திகள் 8-30)

## வழிகாட்டுதல்களின் உள்ளார்ந்த பயன்கள்

இவ்வழிகாட்டுதல்களில் நோக்கம். இடம் பெயரலைக் குறைத்தல், நிலைத்த மாற்று வழியைத் தருதல், இடம் பெயரல் தவிர்க்க முடியாத சூழலில், சில சமரசம் செய்ய முடியாத மனித உரிமைத் தரங்களை மதிக்கவும் பேணவும் இவ்வழிகாட்டுதல்கள் வழிவகுக்கின்றன.

## இவ்வழிகாட்டல்கள் கீழ்க்கண்டவாறு உதவலாம்

- இடம் பெயரல், மறுவாழ்வுப் பணியை மேற்கொள்ள வேண்டிய உள்ளாட்சி அலுவலர்கள், நகராட்சி அதிகாரிகள், தொழில்துறை பிரதிநிதிகள், சட்ட அமலாக்க அதிகாரிகள், காவல்துறையினர், ஆகியோர் இடம்பெயர்ந் தோர்க்கான மறுவாழ்வுப் பணியை மனப்பூர்வமாக நிறைவேற்றும் வகையிலும் வேண்டிய கோட்பாடுகளை உருவாக்கும் வகையிலும் பொறுப்போடு நடந்து கொள்வதோடு, சர்வதேச மனித உரிமைத் தரங் களுக்கு ஏற்ப தங்கள் பணிகள் அமைவதோடு, மனித உரிமை மீறல்கள் எதுவும் நடவா வண்ணம் பார்த்துக் கொள்ளல் அவசியத் தேவையாகும்.

- இடம் பெயரல் தொடர்பான விழிப்புணர்வை இடம் பெயரலுக்கு ஆட்படுவோர்க்கும் குடிமைச் சமூக அமைப்புகளுக்கும் தரவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் விழிப்புணர்வைப் பெறுகின்ற போது தங்கள் உரிமைகளைக் கேட்டுப் பெறுகின்ற ஆற்றலினைப் பெறுவர்.

- தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப அரசும், பொதுத்துறை சார்ந்தோரும் செயற்படுகின்றனரா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

- சட்டம் மற்றும் கொள்கைகளைச் சீர்திருத்தத்திற்கு தூண்டுதல் வேண்டும். இவ்வழி காட்டுதல் நெறிமுறைகளை வளர்ச்சி மற்றும் இடம் பெயரல், மறுவாழ்வு தொடர்பான தேசிய சட்டங்களில் நிர்வாக முடிவுகளில், இணைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் பாதுகாக்கப் பெறும் வகையில் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

- திட்டமிடுவோர்க்கு வழிகாட்டுதல்களைத் தருதல். நகர் மற்றும் ஊரகங்களுக்குச் சமச்சீரான திட்டங்களை வகுக்கும் வகையிலும் மனித உரிமைத் தரங்களின் அடிப்படையில் அமையவும், ஒடுக்கப்பட்டோரின் நலங்களைப் பாதுகாக்கும் வகையிலும் அமையவேண்டும்.

- சட்ட அமுலாக்க முகமைகள் (நீதித்துறை மற்றும் மனித உரிமை ஆணையங்கள்) தேசிய மற்றும் சர்வதேசச் சட்டங்களை இடப்பெயரலைக் குறைக்கவும் மறுவாழ்வை உறுதிப்படுத்தும் வகையிலும் விளக்கவும், அமுலாக்கவும் முயற்சி எடுத்தல் வேண்டும்.

- அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பதில் சொல்லும் பொறுப்பை வளர்த்தல்.

- மாணவர்களிடம் மனித உரிமைக் கல்வியை வளர்த்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச அளவில் கட்டாய வெளியேற்றத்திற்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்ளவேண்டும். கட்டாய வெளியேற்றத்தின் மூலம் மீறப் பெறும் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். பாதுகாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

## வழிகாட்டுதல்களுக்கான கையேடு

கட்டாய வெளியேற்றத்தைத் தடுக்கும் ஆற்றல்மிகு கருவியாக இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் மனித உரிமைகளின் தரத்திற்கேற்ப கட்டாய வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டோர்க்கு முறையான மறுவாழ்வு தரப்படுகிறதா என்பதைப் பெற்றுத்தர இக்கையேடு உதவலாம்.

இக்கையேடு வழிகாட்டுதல்களின் தொகுப்பைத் தருகிறது. இத்தொகுப் பில் முதன்மைக் கூறுகளும், தொடர்ந்து வழிகாட்டுதல் நெறிகளும் தரப்பட் டுள்ளன.

வழிகாட்டுதல்கள் பற்றிய விழிப்புணர்வை மட்டுமல்லாமல் இம்முயற்சி யின் செயற்பாட்டாளர்கள் அனைவரும் மனித உரிமைகளின் தரங்களுக் கேற்ப செயற்படவேண்டிய வழிமுறைகளையும் தருகிறது.

அய்நாவின் இவ்வழிகாட்டுதல்கள் பரந்துபட்ட அளவில் மக்களைச் சென்றடைய வேண்டும். பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பெற வேண்டும். தேசிய சட்டங்களில், கொள்கைகளில் ஒருங்கிணைக்கப்பெற வேண்டும். போதுமான உறைவிட வசதிகள், வேலை, நிலம், உறைவிடத்தின் பாதுகாப்பு, மானுட மதிப்பு, பாதுகாப்பு அனைத்தும் கிடைக்கும் வகையில் உத்தரவாதம் கிடைக்கப் பெறுவதே இக்கையேட்டின் நோக்கமாகும்.

வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும்
கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு
குறித்த அய்.நாவின் கொள்கைகளும்
வழிகாட்டுதல்களும்

**–ஒரு கையேடு**

## II. தொகுப்புரை

## II. தொகுப்புரை

### வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த அய்.நாவின் கொள்கைகளும் வழிகாட்டுதல்களும்

இத்தொகுப்பு வழிகாட்டுதல்களில் தரப்பட்டிருக்கும் முக்கியக் கூறுகளையும் கொள்கைகளையும் கோடிட்டுக் காட்டுவதோடு வாசகர்களுக்குப் பொதுவான ஒரு பார்வையையும் தர முயல்கிறது.

### I. இலக்கும், இயல்பும் (பத்தி 1-10)

அரசுகள் நிலம், மற்றும் வீடுகளிலிருந்து கட்டாய வெளியேற்றங்களிலிருந்து காக்க வேண்டிய கடமை இருப்பதை சர்வதேச சட்டங்கள் உணர்த்துகின்றன. போதுமான வீட்டிற்கான உரிமைகள் பிரிக்கவியலா மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் அமைய வேண்டும்.

- ‘‘சட்டத்திற்குப் புறம்பாக தன்னிச்சையாக ஒருவரின் அந்தரங்கம், குடும்பம், வீடு, தொடர்பு களில் தலையிடக்கூடாது. சட்டத்திற்குப் புறம்பாகத் தலையிடுவதினின்று மீறப்பெறும் உரிமைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை ஒவ்வொரு வருக்கும் உண்டு’’.

கட்டாய வெளியேற்றம் சர்வதேச மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுவதாகும். போதுமான உறையுள் வசதி உணவு, நீர், நலவாழ்வு, கல்வி, வேலை, தனிமனிதர் பாதுகாப்பு, உறையுள் பாதுகாப்பு, கொடுமையிலிருந்து சுதந்திரம் போன்ற உரிமைகளை மீறுவதாகும். கட்டாய வெளியேற்றம் தவிர்க்க இயலா நிலையில் சட்டத்தின் அடிப்படையில், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளலாம்.

அதன் மூலம் வெளியேற்றப்பட்ட தனி மனிதர், குழு சமுதாயத்தின் வாழ்வாதாரங்களைச் சீர்குலைத்துக் குறிப்பிட்ட வாழிடங்களில் வாழ வைப்பது; இதன் மூலம் அனைத்து வகை பாதுகாப்புகளையும் மறுப்பது. கட்டாய வெளியேற்றம் சர்வதேசச் சட்டத்தின் கீழ் வித்தியாசமான ஓர் அம்சமாகும். இது சட்ட ரீதியான பாதுகாப்பு காலத்தை *(tenure)* பற்றிப் பேசுவதில்லை என்பதால் போதுமான உறையுள் வசதியுள் அடங்கும் முக்கிய கூறாகும்.

இக்கையேடு வளர்ச்சி அடிப்படையில் நகர் மற்றும் ஊரகங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கட்டாய வெளியேற்றங்களின் விளைவாக மக்கள் சந்திக்கும் மனித உரிமைப் பிரச்சனைகளைக் கவனத்தில் கொள்கிறது. கட்டாய வெளியேற்றம் பற்றிய அனைத்துலக மனித உரிமை தரங்களையும் இவ்வழிகாட்டுதல்கள் கவனத்தில் கொண்டாலும் வெளியேற்றங்களுக்கு எதிரான சட்டங்கள், நடவடிக்கைகள் விடுபட்ட நிலையில் பலவந்தப்படுத்தி தனிமனிதர்களை, குழுக்களை, சமூகங்களை வீடுகளிலிருந்து அல்லது நிலங்களிலிருந்து, பொது வளங்களிலிருந்து கட்டாயமாக வெளியேற்றலையும், தனிமனிதர், குழு, சமூகங்களின் ஆற்றலை நசுக்குதலும், மாற்றுக் குடியிருப்பு, நிலம், வாழிடம் ஆகியவற்றை உத்தரவாதப்படுத்தாதிருத்தலையும் மற்றும் சட்டப் பாதுகாப்புப் பெற வாய்ப்பிலாதிருப்பதையும் கவனத்தில் கொண்டு பாதுகாப்பு அம்சங்களையும் முன்வைக்கிறது.

## II. பொதுக் கடப்பாடுகள் (பத்திகள் 11-36)

### அ. கடமைக் காவலர்களும், கடப்பாடுகளின் தன்மையும் (பத்திகள் 11-12)

கட்டாய வெளியேற்றத்திற்குப் பலதரப்பட்டோர் ஆணையிடலாம்: துவக்கி வைக்கலாம்: நிறுத்தி வைக்கலாம்: வேண்டுகோள் வைக்கலாம்: ஆனால் அரசுக்கு மட்டுமே இக்கடமை நிறைவேற்றலில் உரிய மனித உரிமை விதிகள் கடைபிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் கடப்பாடு உண்டு. அரசு மட்டும் என்று சொல்கின்றபோது, இதில் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள், அமைப்புகள், சர்வதேச நிதி நிறுவனங்கள், அமைப்புகள், பன்னாட்டு நிறுவனங்கள், தனிநபர்கள், நிலச் சுவான்தார்கள், தனியார் நிலஉடைமையாளர்கள் போன்றோர்க்கும் கடமையுண்டு என்பதை மறந்திடக் கூடாது.

### ஆ. அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகள் (பத்திகள் 13-20)

சர்வதேசச் சட்டங்களின்படி, கட்டாய வெளியேற்றத்திலிருந்து பாதுகாக்க அரசுக்கு கடமையுண்டு. போதுமான உறைவிடவசதி, பாதுகாப்புக் காலம் என்ற அடிப்படை உரிமைகளை இனம், நிறம், பால், மொழி, சமயம், நம்பிக்கை, சமூக அந்தஸ்து, இயலாமை, சொத்து, பிறப்பு என்ற எந்த அடிப்படையிலும் மீறப்படாமல் பாதுகாக்கும் கடமையுண்டு.

## இ. நடைமுறைப்படுத்தலில் அரசின் கடமைகள் (பத்திகள் 21-27)

கட்டாய வெளியேற்றம் தவிர்க்க இயலா சூழலில் மட்டுமே நடத்தப்படுகிறது என்பதற்கான உத்தரவாதத்தை அரசு அளிக்க வேண்டும். சர்வதேச மனித உரிமைத் தரங்களின் அடிப்படையில் நடத்தப்படுகிறது என்ற நியாயமும் சொல்லப்படவேண்டும். வெளியேற்றம் (அ). சட்ட அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். (ஆ). சர்வதேச மனித உரிமைக் கட்டங்களுக்கு ஏற்ப அமைய வேண்டும். (இ). வெளியேற்றப்பட்டவர்க்கு மறுவாழ்வும், இழப்பீடும் கொடுப்ப தற்கான உத்தரவாதம். (ஈ). சமூக நலன் கருதியே வெளியேற்றம் நடைபெற வேண்டும். (எ). காரண காரியத்தோடு அமைதல். (ஏ). அய்நாவின் வழிகாட்டு தல்களுக்கு ஏற்ப அமைய வேண்டும். இம்முறைகள் நலிந்த பிரிவினர் அனைவர்க்கும் பொருந்தும்.

## ஈ. தடுக்கும் யுத்திகள், கொள்கைகள், நிகழ்வுகள் *(Programms)* (பத்திகள் 28-36)

கட்டாய வெளியேற்றத்தால் பாதிக்கப்படும் தனி நபர்கள், குழுக்கள், மற்றும் சமூகங்களைப் பாதுகாக்கவும் இதன் பின் விளைவுகளைச் சந்திக்கவும் அரசு போதிய யுக்திகளையும், கொள்கைகளையும் வகுப்பதோடு இருக்கின்ற வளங்களையும் வைத்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே கையாண்ட யுக்திகள் கொள்கைகள் சர்வதேச மனித உரிமைத் தரத்திற்கு ஏற்ப இருக்கிறதா என்று மறு ஆய்வும் செய்ய வேண்டும். கட்டாய வெளியேற்றத் திற்கு வேறு சுயநலக் காரணங்கள் இருக்கின்றனவா என்பதையும் கவனிக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

இடம் பெயரலைக் குறைப்பதற்கான யுக்தியை வகுக்க அரசு முன்னுரிமை வழங்க வேண்டும். வளர்ச்சித் திட்டத்தின்அடிப்படையில் செய்யப்படும் வெளியேற்றங் களினால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை முன்கூட்டியே ஆய்வு மூலம் கண்டறிய வேண்டும்.இவ்வாய்வு மாற்றுத் திட்டத்தை அல்லது யுக்தியை வகுக்கும் நோக்கில் நடத்தப்படுவதில்லை. இவ்வாய்வு கட்டாய வெளியேற் றத்தால் பாதிக்கப்படும் பெண்கள், குழந்தைகள், முதியோர் ஒதுக்கப்பட்ட மக்கள் மீது ஏற்படுத்தும் பாதிப்பை அறியவே நடத்தப்பட வேண்டும்.

## III. வெளியேற்றத்திற்கு முந்திசெய்யவேண்டுவன (பத்திகள் 37-44)

நகர் மற்றும் ஊரகத்திட்டங்கள், வளர்ச்சித் திட்டமுறைகளால் பாதிக்கப்படுவோரையும் கீழ்க்கண்ட கூறுகளையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

அ. வெளியேற்றத்தால் பாதிக்கப்படவிருப்போர்க்கு முன்கூட்டியே முறையான அறிவிப்பு தரப்படவேண்டும். வெளியேற்றம் மற்றும் மாற்று ஏற்பாடுகள் பற்றிய பொது விசாரணை ஒன்று நடத்திடவேண்டும்.

ஆ. வெளியேற்றம் பற்றிய போதிய தகவல்கள் உரிய அதிகாரிகளால் முன்னதாகவே தரப்படவேண்டும். வெளியேற்றத்தில் அடங்கிய நிலம் பற்றிய ஆவணங்கள், மறு குடியேற்றத்திற்கான திட்டங்கள், நலிந்த பிரிவினரைப் பாதுகாப்ப தற்கான திட்டங்கள் உரிய முறையில் அறிவிக்கப் பெறவேண்டும்.

இ. பொதுமக்கள் இத்திட்டத்தின் சாதக பாதகங்களை ஆய்வு செய்ய, மாற்றுக் கருத்துக்களை தர, மறுப்புகளைச் சொல்ல வாய்ப்புத் தர வேண்டும்.

ஈ. பாதிக்கப்படவிருக்கும் மக்களுக்குச் சட்டம் மற்றும் தேவையான ஆலோசனைகள், அவர்தம் உரிமைகள், விருப்பங்கள் பற்றி தெரிவிக்க வேண்டும்.

உ. பொதுவிசாரணை நடத்தி பாதிக்கப்பட்டோரின் கருத்துக்களைக் கேட்டல். வெளியேற்றத் திட்டத்தை எதிர்க்கவும் மாற்றுக் கருத்தை முன்வைக் கவும் அவர்களின் ஏனைய தேவைகளையும் முன் வைக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

வெளியேற்றத்தைத் தவிர்க்க மாற்றுத் திட்டங்களை அரசு காண முயல வேண்டும். உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்கள், பெண்கள், பூர்வகுடிகள், மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்பட்டோர் சார்பில் பேசும் ஏனையோர் அனைவர்க்கும் சரியான தகவல்களைப் பெறவும், பங்கேற்கவும், மாற்றுத் திட்டங்களை முன்வைக்கவும் உரிமையுண்டு. அதிகாரிகள் இவர்கள் கோரிக்கைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வெளியேற்றம் பற்றிய செய்திகளை மக்கள் பேசும் மொழியில் உரிய மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

வெளியேற்றும் நடவடிக்கை தனிமனிதர்களை வீடிழக்கச் செய்திடக் கூடாது. இவர்கள் உரிமைகளையும் மீறிவிடக்கூடாது. அனைத்து மறுவாழ்வு நடவடிக்கைகளும், வீடு, நீர்வசதி, மின்சாரம், பள்ளிகள், சாலைவசதி, நில ஒதுக்கீடு போன்ற வசதிகள் அனைத்தும் சர்வதேச மனித உரிமைத் தரங் களுக்கு ஏற்ப அமைதல் வேண்டும். ஓரிடத்திலிருந்து வெளியேற்றப்படு வோர்க்கு இவ்வசதிகள் முன்கூட்டியே செய்யப்பட்டிருக்கவேண்டும்.

## IV. வெளியேற்றத்தின்போது (பத்திகள் 45-51)

வெளியேற்ற நடவடிக்கையின்போது மனித உரிமைத் தரங்களை மதிக்கின்ற வகையில் அரசதிகாரிகள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் இடம்பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

வெளியேற்ற நடவடிக்கையின் போது, பாதிக்கப்பட்டோரின் மனித உரிமைகளும் பாதுகாப்பும், மாண்பும், பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வெளியேற்றத்தின்போது பெண்கள் மீது வன்முறைகளைப் பிரயோகிக்கவோ பாகுபாடுகாட்டவோ கூடாது. இது குழந்தைகளுக்கும் பொருந்தும்.

மோசமான கால நிலையில், குறிப்பாக இரவு நேரங்கள், திருவிழா, மதரீதியான விடுமுறை நாட்கள்,தேர்தலுக்கு முந்திய நாட்கள், பள்ளித் தேர்வுக்கு முந்திய நாட்கள் வெளியேற்றங்கள் நடைபெறக்கூடாது. வெளி யேற்றப் பணியில் ஈடுபடுவோர் எவரும் தாக்குதலுக்குள்ளாகாமற் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

## V. வெளியேற்றத்தின் பின்; உடனடி நிவாரணமும் மறுகுடியேற்றமும் (பத்திகள் 52-58)

கட்டாய வெளியேற்ற நடவடிக்கையின் போது தவிர, மற்றைய வகை வெளியேற்றத்தின் போது அரசு அல்லது ஏனைய அமைப்புகள் போதிய இழப்பீடுகளுக்கு அல்லது மாற்று தங்குமிடங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எந்தச் சூழலில் வெளியேற்றம் நடந்தாலும் பாகுபாடு எதுவுமின்றி உரிய அதிகாரிகள் பாதிக்கப்பட்ட தனிமனிதர், குழுக்கள் அல்லது சமுதாயத்தினர்க்கு உடனடி நிவாரணம் அளித்தல் வேண்டும்.

அ). அவசியமான உணவு, நீர், சுகாதார வசதி. ஆ). அடிப்படை மருத்துவ வசதி. இ). அடிப்படை உறைவிட வசதி. ஈ). போதிய உடைகள் எ). மூலவாழ் வாதாரங்கள். ஏ). வீட்டு கால்நடைகளுக்கு உணவு, ஏற்கனவே அனுபவித்து வந்த சொத்துக்களை அனுபவிக்க வாய்ப்பு. தாங்கள் ஏற்கனவே சமூகமாக அல்லது குடும்பமாக வாழ்ந்து வந்தவர்களோடு பிரியாமல் வாழ்தற்கான வாய்ப்பு.

சிறப்புக் கவனங்கள் செலுத்த வேண்டியவைகள்: அ). பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலவாழ்வுத் தேவைக்கு முக்கியத்துவம் அளித்தல். குறிப்பாகப் பெண்களின் ஆரோக்கிய தேவைகள் நிறைவுறும் வகையில் எளிய வாய்ப்புகளை அளித்தல். பாலியல் ரீதியான பாதிப்புக்குள்ளான பெண்களுக்கு உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதலுக்கு போதிய ஏற்பாடுகளைச் செய்தல்.

ஆ. வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டோர்க்குக் கிடைக்க வேண்டிய மருத்துவ வசதிகள் தொடர்ந்து கிடைக்க செய்தல்.

## இ. தொற்று நோய்கள் மற்றும் *HIV/AIDS* நோய்களைத் தடுக்க ஏற்பாடு செய்தல்.

மறுகுடியிருப்புக்காக அடையாளம் காணப்பட்ட இடங்கள், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். அ). பாதுகாப்புக் காலம் ஆ). சேவைகள்,பொருட்கள், குடிநீர் கிடைப்பதற்கான கட்டு மான வசதிகள், சமையல் செய்தற்கான எரிபொருள், சுகாதாரம், விளக்கு, சூடாக்க வசதி, சலவை வசதிகள், உணவுப் பாதுகாப்பு வசதி, கழிவு நீர் செல்ல வசதி, அவசர கால சேவைகள், பொது வசதிகள். இ). வீட்டு வசதி ஈ). போதிய வாழும் வசதியுடைய வீடுகள். போதிய வெளி, குளிர், வெப்பம், மழை, காற்று ஏனைய உடல் நலத்திற்கு வரும் கேடு, அமைப்பு ரீதியாக ஏற்படும் சீர்குலைவுகள் வீட்டில் வசிக்கும் நபர்களுக்கான பாதுகாப்பு உ). நலிந்த பிரிவினர்க்கு எளிதில் எட்டும் வாய்ப்பு. ஊ). வேலை வாய்ப்புக்கான வசதி, மருத்துவ வசதிகள், பள்ளிகள், குழந்தை மையங்கள், ஏனைய வசதிகள். எ). கலாச்சார ரீதியான பொருத்தமான வாழிடங்கள்; வாழ்தற்கு ஏற்ற போதுமான வாழிடங்கள்: அந்தரங்கம், பாதுகாப்பு, முடிவெடுப்பதில் பங்கேற்பு, வன்முறையற்ற வாழ்வு, வன்முறையில் சிக்கிக்கொண்டோர்க்கு நிவாரணம் என்பவைகளை உள்ளடக்கும்.

## VI. கட்டாய வெளியேற்றத்திலிருந்து நிவாரணம் (பத்திகள் 59-68)

கட்டாய வெளியேற்றத்தினால் அச்சுறுத்தப்பட்டுப் பாதிக்கப்படுவோர் அனைவரும் உரிய நிவாரணம் பெற தகுதியுடையோர் ஆவர். இவர்களின் குறையைக் கேட்கவும், சட்ட ரீதியான நிவாரணம் பெறவும், சட்ட உதவி பெறவும், மீட்டளிப்பு, மறு குடியிருப்பு, மறுவாழ்வு, இழப்பீடு பெறவும் அடிப்படை கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தரும்நிவாரணம் மற்றும் இழப்பீட்டைச் சரிசெய்தல், கடுமையான மனித உரிமை மீறல்களில் பாதிக்கப்படுவோர்க்கு சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் அடிப்படையில் நிவாரணம் பெற உரிமையுண்டு.

### அ. இழப்பீடு (பத்திகள் 60-63)

பொருளாதார ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்ட இழப்புகளுக்கு மீறல்களின் அளவுக்கு ஏற்பவும் ஒவ்வொரு வழக்கின் தன்மைக்கு ஏற்பவும் இழப்பீடு வழங்கப்பெற வேண்டும். நிலம் அல்லது வளம் தருகின்ற சொத்து இழப்பீடாக இருக்கலாமே தவிர, இழப்பீடு நிதியாக இருக்கக்கூடாது. வெளியேற்றத் தினால், ஒருவர் நிலம் கையகப்படுத்தப்பட்டால், நிலம் மட்டுமே இழப்பீ டாகக் கொடுக்கப்படவேண்டும். இந்நிலம் ஒருவர் இழந்த நிலத்தின் தன்மை, அளவு மற்றும் மதிப்புக்குச் சமமாக இருத்தல் வேண்டும். இந்த இழப்பீட்டைப் பெறுபவரில் ஆண் மற்றும் பெண் இருவரும் சமபங்காளியாக இருத்தல் வேண்டும்.

### ஆ. மீட்டளிப்பும் திரும்பலும் (பத்திகள் 64-67)

திரும்பல் அல்லது மாற்றுக் குடியிருப்பு சாத்தியமில்லா நிலையில் உரிய அதிகாரிகள் மாற்று வழிகளைக் காண முயலவேண்டும். பாதுகாப்பான உரிய வழிகளைக் காட்டல், நிதியளித்துப் பாதுகாப்பான வீடு அல்லது வாழிடங்களைப் பாதிக்கப்பட்டோர் மாண்பு குலையா வண்ணம் தாமாகவே முன் வந்து ஏற்றுக் கொள்ளச் செய்யல்.

தம் வாழிடங்களுக்கு மீண்டும் திரும்புதல் சாத்தியமாகா நிலையிலோ சொத்துக்களை மீண்டும் பெறமுடியா நிலையிலோ, உரிய அதிகாரிகள் கட்டாய வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டோர்க்கு உரிய இழப்பீட்டையோ, மீட்டளிப்பையோ பெற்றுத்தர உதவவேண்டும்.

## இ. மறுகுடியிருப்பும் மறுவாழ்வும் (பத்திகள் 68)

அனைத்துத் தரப்பினருமே திரும்பிவரும் உரிமைக்கு முக்கியத்துவம் தந்தாலும், வளர்ச்சியை முன்னிட்ட காரணங்களால் குறிப்பாக மக்கள் நலன், சுகாதாரம், பாதுகாப்பு மனித உரிமைகளை அனுபவித்தல் இயலாது போனால், மறுகுடியிருப்பு ஒரு சமூகச் சூழலில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு ஏற்ப நீதியோடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## VII. கண்காணித்தல், மதிப்பீடு மற்றும் தொடர் செயல்பாடுகள் (பத்திகள் 69-70)

அரசுகள் தரரீதியாகவும் அளவு ரீதியாகவும் கட்டாய வெளியேற்றத்தால் உருவாகும் விளைவுகளை தம் சட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதிப்பீடு செய்ய வேண்டும். கண்காணிப்பின் அறிக்கைகளைப் பொதுமக்களும் அகில உலக அமைப்புகளும் அறியச் செய்ய வேண்டும். இதன் மூலம் பிரச்சனைகளை அனைவரும் நியாயமான முறைகளை உலகறியச் செய்யலாம்.

## VIII. சர்வதேசச் சமூகங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பங்கு (பத்திகள் 71-74)

சர்வதேச சமூகங்களுக்கும் உறையுள் உரிமைகள் நிலம் மற்றும் சொத்துரிமைகளைக் காக்கவும் மற்றும் வளர்க்கவும் கடப்பாடு உண்டு. சர்வதேச நிதி, வணிகம், வளர்ச்சி மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள், முகமைகள், வாக்குரிமை கொண்ட நன்கொடை அரசுகளெல்லாம் கட்டாய வெளியேற்றத்தைச் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் தொடர்புடைய மனித உரிமைத் தரங்களுக்கு ஏற்ப மீறப்படாமலிருக்க பார்த்துக் கொள்ள வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களும் ஏனைய வணிக நிறுவனங்களும் உறையுள் உரிமைகளைப் போற்றும் வகையிலும் கட்டாய வெளியேற்றத்தைத் தடுக்கும் வகையிலும் தங்கள் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த அய்.நாவின் கொள்கைகளும் வழிகாட்டுதல்களும்

**–ஒரு கையேடு**

## முழுவுரை

| | பொருளடக்கம் | பத்திகள் |
|---|---|---|
| I. | இலக்கும் இயல்பும் | 1-10 |
| II. | பொதுக் கடப்பாடுகள் | 11-36 |
| | அ. கடமையாளரும், கடப்பாடுகளின் தன்மையும் | 11-12 |
| | ஆ. அடிப்படை மனித உரிமைக் கொள்கைகள் | 13-20 |
| | இ. அரசின் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் | 21-27 |
| | ஈ. தடுக்கும் யுக்திகளும் கொள்கைகளும் நிகழ்வுகளும் | 28-36 |
| III. | வெளியேற்றத்திற்கு முந்தி | 37-44 |
| IV. | வெளியேற்றத்தின் போது | 45-51 |
| V. | வெளியேற்றத்தின் பின்: உடனடி நிவாரணமும் மீள்குடியேற்றமும் | 52-58 |
| VI. | கட்டாய வெளியேற்றங்களும் நிவாரணமும் | 59-68 |
| | அ. இழப்பீடு | 60-63 |
| | ஆ. மீட்டளிப்பும் திரும்பச் செய்தலும் | 64-67 |
| | இ. மறுகுடியமர்வும் மறுவாழ்வும் | 68 |
| VII. | கண்காணிப்பு, திறனாய்வு, தொடர் செயற்பாடுகள் | 69-70 |
| VIII. | சர்வதேச சமூகம் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பங்கு | 71-73 |
| IX. | கருத்து விளக்கம் | 74 |

## I. இலக்கும் இயல்பும்

1. உறைவிடத்திற்கான உரிமைகளோடு ஏனைய மனித உரிமைகளை அரசுகள் காக்க வேண்டுவதை சர்வதேச சட்டங்கள் தெளிவாகத் தருகின்றன. சர்வதேச மனித உரிமைப் பிரகடனம், சர்வதேச பொருளாதார, சமூக, கலாச்சார ஒப்பந்தம் (பிரிவு *II* பத்தி 1) குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை (பிரிவு 27, பத்தி 3) பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை பிரிவு 14-பத்தி 2 *(h)* இனரீதி யான பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை பிரிவு 5 (1) இவையனைத்தும் போதுமான உறைவிடம் மற்றும் நிலவுரிமைகள் பற்றித் தெளிவாகத் தருகின்றன.

2. இவைகளோடு, சர்வதேச குடிமை மற்றும் அரசியல் உரிமை களுக்கான ஒப்பந்தம் பிரிவு 17 - சட்டத்திற்குப் புறம்பாகவோ தன்னிச்சை யாகவோ, ஒருவரின் குடும்பம், அந்தரங்கம், வீடு, தொடர்பு இவைகளில் தலையிட உரிமை இல்லை. மேலும் "இம்மாதிரியான தலையீடு மற்றும் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு, சட்டரீதியான பாதுகாப்பு பெற ஒவ்வொரு வருக்கும் உரிமையுண்டு" குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை பிரிவு 16-லும் இம்மாதிரி பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. 1951-ல் உருவான அகதிகள் நிலை தொடர்பான உடன்படிக்கை பிரிவு 21. அகில உலக தொழிலாளர் அமைப்பின் *(ILO)* பிரிவு 16- 1989-ல் உருவான சுதந்திர மடைந்த நாடுகளின் பழங்குடி மக்கள் மற்றும் ஆசிவாசிகளுக்கான உடன்படிக்கை எண் (169) 1949-இன் செனிவா உடன்படிக்கை பிரிவு 49 (நான்காவது செனிவா உடன்படிக்கை) ஆகியவற்றிலும் இப்பாதுகாப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

3. இவ்வழிகாட்டுதல்கள் நகரம் மற்றும் ஊரகங்களில் வளர்ச்சி தொடர்பான வெளியேற்றங்கள், இடப் பெயர்வுகள் ஏற்படுத்தும் மனித உரிமை விளைவுகள் குறித்து பேசுகின்றன. இவ்வழி காட்டுதல்கள் வளர்ச்சி தொடர்பான இடப் பெயர்வை விரிவாகப் பேசுகின்றன. *(E/CN.4/Sub.2/ 1997)* இவை சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் அடிப்படையி லானவை. உரிமைகளுக்கான குழு பொது மதிப்புரைக்கு ஏற்பவும் எண் 4 (1991) பொது மதிப்புரை எண் 7 (1997) உள்நாட்டு இடம் பெயர்வு குறித்த வழிகாட்டும் கொள்கைகள் *(E/CN4/1998/53/Add 2)* பாதிக்கப்பட்டோரின்

உரிமைகள் மீறல் தொடர்பாக அகில உலக மனித உரிமைகள் சட்டம், மனிதாபிமான சட்டம், ஐ. நா. வின் பொதுச் சபையின் தீர்மானம் 60/147 அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்த நபர்களின் வீடு மற்றும் சொத்துக்கள் மீட்டளிப்பு தொடர்பான கொள்கைகள் (பார்க்க *E/CN.4/Sub.2/2005/17 d* சேர்க்க 1)

4. சர்வதேச மனித உரிமைத் தரங்களில், கட்டாய வெளியேற்றம் பற்றிய விளக்கங்கள் அனைத்தையும் கவனத்தில் கொண்டாலும், இந்த வழிகாட்டல்கள் அல்லது வெளியேற்றத்திற்கு உடன்படாத தனிநபர், குழு, சமுதாயத்தினரை நிலம், வீட்டிலிருந்து வெளியேற்றல், இவர்களின் பொதுச் சொத்தை அபகரித்தல், தனிநபர் குழு, சமுதாயம், ஓரிடத்தில் வாழவியலா சூழலை உருவாக்கல், பயன்படுத்தக்கூடிய சட்ட வரம்புகளை எட்ட இயலாது செய்தல் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

5. கட்டாய வெளியேற்றம் சர்வதேச சட்டத்தில் வித்தியாசமான ஒரு போக்காகும். இவ்வெளியேற்றங்களுக்கும் சட்டரீதியான பாதுகாப்புக் காலத் தோடு தொடர்பு இருப்பதில்லை. கட்டாய வெளியேற்றங்களுக்கும் தன்னிச் சையாக இடம் பெயரலுக்கும் தொடர்புண்டு. ஒட்டு மொத்த மக்களை இடம் பெறச் செய்தல், மக்களை விரட்டியடித்தல், ஒட்டு மொத்த வெளியேற்றம், இனஒழிப்பு போன்ற செயற்பாடுகள் எல்லாம் கட்டாய வெளியேற்றங்கள் அல்லது தன்னிச்சையான இடம் பெயரச் செய்தலிலும் அடங்கும்.

6. கட்டாய வெளியேற்றங்கள் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகளை மீறுதலாகும். போதுமான உறையுள் வசதி, உணவு, நீர், ஆரோக்கியம், கல்வி, வேலை, தனிநபர் பாதுகாப்பு, வீட்டுப்பாதுகாப்பு, கொடூரத்திலிருந்து விடுதலை, மனிதாபிமானமான முறையில் நடத்தப்படல், நடமாடும் உரிமை, இவைகளெல்லாம் உறைவிட உரிமையுள் அடங்கும். வெளியேற்றங்கள் சட்டத்திற்கு உட்பட்டும், சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு ஏற்பவும் நடத்தப்பெற வேண்டும்.

7. கட்டாய வெளியேற்றம், சமத்துவமின்மையை, சமூகச் சிக்கலை, ஒதுக்குதலை, ஒதுங்கி வாழும் நிலையை ஊக்குவிக்கிறது. இது வறியோ ரையும் சமூகத்தில் ஒதுக்கப்பட்டோரையும் குறிப்பாகப் பெண்கள், குழந்தை கள், சிறுபான்மையோர், பழங்குடி மக்களை வெகுவாகப் பாதிக்கிறது.

8. வளர்ச்சி அடிப்படையில் செய்யப்படும் வெளியேற்றங்கள் மக்கள் நலன் என்ற பெயரில் (அதாவது பெரிய அணைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள்) செய்யப்படுகின்றன. நகரங்களை அழகுபடுத்துதல், சேரிகள் மேம்பாடு, ரியல் எஸ்டேட், நிலத்தாவாக்கள், நிலவிலை ஏறல், விளையாட்டு நிகழ்வுகள், சர்வதேச வணிகம் போன்றன பெயரில் வெளியேற்றங்கள் துரிதகதியில் நடைபெறுகின்றன. இந்நடவடிக்கைகள் பல பன்னாட்டு நிதி உதவியுடன் நடைபெறுகின்றன.

9. சுற்றுப்புறச் சூழல் அழிவு, பொதுமக்களிடம் காணப்பெறும் பூசல்கள், போராட்டங்கள், கலகங்களால் விளையும் மக்கள் வெளியேற்றம், உள்நாட்டில் எழும் அமைதியின்மை, சர்வதேசச் சூழலில் ஏற்படும் அமைதியின்மை, உள்ளூர் வன்முறை, மனித உரிமைத் தரங்களுக்கு ஒவ்வா சில கலாச்சார பழக்க வழக்கங்கள் போன்ற காரணிகள் வெளியேற்றங்களுக்குக் காரணமாக அமையலாம். இவ்வழிகாட்டுதல்கள் இக்காரணிகளை, பெரிய அளவில் கவனத்தில் கொள்ளவில்லையெனினும், இவைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டியதாகிறது. சரியான நிவாரணத்திற்கான உரிமை, மோசமாக மீறப்படும் சர்வதேச மனிதாபிமான உரிமைச் சட்டம், உள்நாட்டில் இடம்பெயரல் தொடர்பான வழிகாட்டும் கோட்பாடுகள், உறைவிட உரிமைக்கான கொள்கைகள், அகதிகள் இழந்த சொத்துக்களை மீண்டும் பெறுதற்கான கொள்கைகள் இங்கு கவனத்தில் கொள்ளப் படுகின்றன.

10. இவ்வழிகாட்டுதல்கள், அரசுகள் வளர்ச்சி என்ற பெயரில் செய்யப்படும் வெளியேற்றங்கள் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு முரணாக இருக்கக்கூடாது என்று வற்புறுத்துகிறது. அரசுகள் இந்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் கொள்கைகளையும், சட்டங்களையும் வகுக்க உதவுகிறது.

## II. பொதுக் கடப்பாடுகள்

### அ. கடமைப்பட்டோரும் கடப்பாடுகளின் தன்மையும்

11. கட்டாய வெளியேற்றத்தில் பல்வேறு தரப்பினர்க்கும் இதில் பல்வேறு வழிகளில் பங்கிருந்தாலும் அரசின் செயற்பாடுதான் முதன்மை பெறுவதாகும். வெளியேற்றத்தின்போது மனித உரிமைத் தரங்கள்

காக்கப்பெறுகின்றனவா என்று கண்காணிக்கும் பொறுப்பு அரசுக்கே உண்டு. அரசுக்குத்தான் முதன்மைப் பொறுப்பு என்று சொல்கின்றபோது, திட்ட மேலாளர், ஏனைய நபர்கள், சர்வதேச நிதி நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், நிலவுடைமையாளர்கள், நிலச் சொந்தக்காரர்களுக்கு பங்கில்லை என்று கூறமுடியாது.

12. சர்வதேச சட்டப்படி மரியாதை, பாதுகாப்பு, மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாப்பது அரசுகளின் கடப்பாடாகும். உள்ளூர் அளவிலும், தேசம் தாண்டியும் மனித உரிமைகளை அரசு மீறலாகாது. யாரும் யாருடைய உரிமைகளையும் மீறுதலை அரசு தடுத்தல் வேண்டும். மீறலால் பாதிக்கப்பட்டோர்க்கு நிவாரணம் அளித்தல், உரிமை மீறாமலிருக்க உதவுதல் அரசின் கடமையாகும். இக்கடமைகள் அரசின் தலையாயப் பொறுப்பாகும். இக்கடமைகள் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். தன்னெழுச்சியாகவும் அமைதல் வேண்டும்.

## ஆ. அடிப்படை மனித உரிமைக் கொள்கைகள்

13. சர்வதேச மனித உரிமைகள் சட்டப்படி, தரமான வாழ்வின் ஒரு பகுதியே போதிய வீட்டு வசதிக்கான உரிமையாகும். போதிய உறைவிட உரிமையென்பது, தன்னிச்சையாக அல்லது சட்டத்திற்குப் புறம்பாக ஒருவரின் அந்தரங்கம், குடும்பம், வீடு, பாதுகாப்புக் காலத்தில் தலையிடா திருத்தலும் உறைவிட உரிமையுள் அடங்கும்.

14. சர்வதேச சட்டத்தின்படி கட்டாய வெளியேற்றத்திலிருந்து பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. அது மட்டுமல்ல; போதிய உள்ளுறை உரிமையும், பாதுகாப்புக் காலமும் இனம், நிறம், பால், மொழி, மதம், நம்பிக்கை, அரசியல், கொள்கை, தேசியம், இனம், பிறப்பு என்ற எதனடிப்படையிலும் பாகுபடுத்தக்கூடாது.

15. வழிகாட்டுதல்கள் கொள்கையின் அடிப்படையில் கட்டாய வெளியேற்றத்திலிருந்து பாதுகாப்புப்பெறவும் போதிய உறையுள் உரிமையைப் பெறவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையுண்டு.

16. அனைத்து நபர்கள், குழுக்கள், சமூகங்கள்–அனைவர்க்கும் உறைவிடத்திற்கான உரிமையுண்டு. உறைவிட உரிமை என்பது மாற்று நிலத்தையும், தரமான வீட்டையும் பெறும் உரிமையாகும். இவ்வீடுகளை எளிதில் சென்றடையும் உரிமையும் வாழிட உரிமையும் பாதுகாக்கும் உரிமையும், போதிய கலாச்சாரச் சூழமைவும், வாழிடத்தின் பொருத்தமும் அடிப்படை வசதிகளான கல்வி மற்றும் சுகாதார வசதியையும் உள்ளடக்கியதாகும்.

17. வெளியேற்றத்திற்கு ஆட்படுவோர் சரியான சட்டப் பாதுகாப்புப் பெற உரிமையுண்டு. வெளியேற்றத்தின் போது எவ்வித மனித உரிமை மீறல் களுக்கும் ஆட்படா வகையில் பாதுகாப்புப் பெற உரிமையுண்டு.

18. கட்டாய வெளியேற்றத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையைத் தடுக்கும்வகையில் அரசு நடவடிக்கை எதுவும் எடுக்கக்கூடாது.

19. கட்டாய வெளியேற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கையுள் தன்னிச்சை யான இடம் பெயரலின் போது மக்களின் இன, சமய, தேசிய இனப் பண்புகள் பாதிக்கப் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

20. மனித உரிமைக் கடப்பாடுகளுக்கு ஏற்புடைய வகையிலும் சர்வதேச வளர்ச்சி உதவிகளின் அம்சங்களோடு ஒத்துச் செல்லும் வகையிலும் அரசுகளின் வெளியேற்றம் மற்றும் நடவடிக்கைகள் அமைதல் வேண்டும்.

## இ. அரசின் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்

21. வெளியேற்றம் தவிர்க்க இயலாச் சூழலில் மட்டுமே நடைமுறைப் படுத்தப்படுவதை அரசு உத்தரவாதம் செய்யவேண்டும். சர்வதேச மனித உரிமைகளால் அங்கீகரிக்கப்பட்ட அளவிலேயே வெளியேற்றத்தின் பாதிப்பு கள் அமைதல் வேண்டும். எந்த வெளியேற்றமும் அ). சட்டத்தால் அங்கீகரிக் கப்பட்டிருத்தல். ஆ). சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு ஏற்ப அமை தல். இ. மக்கள் பொது நலனைக் கருத்தில் கொள்ளல். ஈ). நியாயபூர்வமாக இருத்தல். எ). முழுமையான இழப்பீடும் மறுவாழ்வும் கிடைத்தலை உறுதி செய்யும் அளவுக்கு ஒழுங்குபடுத்தல். ஏ). வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தல். வழிகாட்டுதல்களில் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக் கவசங்கள் அனைத்து நலிந்த பிரிவினர்க்கும் பாதிக்கப்பட் டோர்க்கும் செல்லுபடியாகும். பாதிக்கப்பட்ட மக்கள் வீடுகளுக்கான உரிமை சாசனம் வைத்திருந்தாலும் உள்ளூர் விதிப்படி சொத்து வைத்திருந்தாலும் பொருந்தும்.

22. சர்வதேச மனித உரிமைகள் தரும் கடப்பாடுகளுக்கு ஏற்பவே அரசுகளின் சட்டங்களும், கொள்கைகளும் வெளியேற்றம் குறித்து அமைய வேண்டும். அரசுகளும் நிலம் அல்லது வீடுகளை பறிமுதல் செய்கையில் மிகுந்த கவனத்தோடு, மனித உரிமைகள் மீறா வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு கருதி, நிலச்சீர்திருத்தம் அல்லது நிலப்பங்கீடு செய்ய அரசு கருதினால், மனித உரிமை மீறலாக கருதத் தேவையில்லை. ஆனால் தனி மனிதரோ, பொதுமக்களோ, சர்வதேச மனித உரிமை தரங்கள் அல்லது சட்டங்களை மீறி நிலம் அல்லது வீட்டை ஆக்கிரமித்தால் அரசு குற்ற வழக்கு தொடர உரிமையுண்டு. கட்டாய வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் பாதுகாப்பு வழங்கும் கடமை அரசுகளுக்கு உண்டு.

23. அனைத்து மக்களும் உறைவிட உரிமையை சமமாக அனுபவிக்கும் வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசுகள் உரிய சட்டங் களையும் கொள்கைகளையும் வகுத்து, கட்டாய வெளியேற்றத்தால் பாதிக் கப்படுவோரைப் பாதுகாக்க வகை செய்தல் வேண்டும். இச்சட்டங்கள் சர்வ தேசச் சட்டங்களுக்கு ஏற்ப அமையவேண்டும்.

24. எந்த விதமான பாகுபாட்டு வடிவங்களையும் உறைவிட உரிமைகளை அனுபவிப்பதில் அனுமதிக்க கூடாது. ஏற்கனவே இருக்கின்ற தேசிய சட்டங்களை, கொள்கைகளை மறு ஆய்வு செய்வதோடு, இச்சட்டங்கள், கொள்கைகள் சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு ஏற்ப இருக்கின்றனவா என்றும் பார்த்துக் கொள்ளவேண்டும். விரிவாகச் செய்யப்படும் இம்மறு ஆய்வு இருக்கின்ற சட்டம், ஒழுங்குமுறை, கொள்கைகளின்படி பொதுத்துறையைத் தனியார்மயமாக்கல், வாரிசுரிமை மற்றும் கலாச்சார பழக்க வழக்கங்கள் வெளியேற்றத்திற்குக் காரணியாக அமையக் கூடாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

25. கட்டாய வெளியேற்றத்திலிருந்து மக்களுக்கு உரிய சட்டப்பாதுகாப்பு கொடுக்கும் வகையில், அரசுகள் குறிப்பிட்ட மக்களுக்கு சட்டரீதியான பாதுகாப்புக் காலம் (secure) வழங்கவேண்டும். இப்பாதுகாப்பு இல்லா மனிதர்க்கும், குடும்பத்தினர்க்கும் இப்பாதுகாப்பு வழங்கப்பெற வேண்டும். இப்பாதுகாப்பு நிலம் அல்லது வீட்டு சாசனம் இல்லாதவர்க்கும் பொருந்தும்.

26. உறைவிட உரிமைகளை ஆண்களும், பெண்களும் சமமாக அனுபவிக்க அரசு உத்தரவாதமளிக்க வேண்டும். கட்டாய வெளியேற்றத்தில் பெண்கள் பாதிக்கப்படுவதினின்று காக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பெண்களுக்கும் வீடு மற்றும் நிலத்திற்கான சாசனம் வழங்கப்பட வேண்டும்.

27. வளர்ச்சி உதவி, வணிகம், முதலீடு, பன்முகவடிவு கொண்ட அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் பங்கேற்பு இவைகளிலும் அரசுகள் மனித உரிமைத் தரங்களை ஒருங்கிணைக்கவேண்டும். சர்வதேச ஒத்துழைப்பிலும் மனித உரிமைகளுக்கான கடப்பாடுகளை நடைமுறைப் படுத்த வேண்டும். இவ்வொத்துழைப்பில் நிதி பெறுவோராகவும் நிதியளிப்போ ராகவும் இருக்கலாம். கட்டாய வெளியேற்றத்தின் மூலம் மனித உரிமை களையும், இவ்வழிகாட்டுதல்களையும், சர்வதேச சட்டங்களையும் மீறுகின்ற சர்வதேச அமைப்புகளின் திட்டங்கள் எதனையும் நாட்டில் நடைமுறைப் படுத்த முடியாது என்பதில் அரசுகள் உறுதியாக இருத்தல் வேண்டும்.

## ஈ. தடுக்கும் யுக்திகளும், கொள்கைகளும் செயல் திட்டங்களும்.

28. கட்டாய வெளியேற்றத்தினால் பாதிக்கப்படும் குழுக்கள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்பிற்கான யுக்திகள் கொள்கைகளை செயற்திட்டங் களை அரசுகள் தம்மிடம் இருக்கும் வளங்களுக்கு ஏற்ப முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும்.

29. ஏற்கனவே வகுத்த யுக்திகள், கொள்கைகள், செயற்திட்டங்கள், சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கேற்ப இருக்கின்றனவா என்பதனை திறனாய்வு செய்தல் அவசியம். ஆய்வுகள், ஏற்கனவே ஆண், பெண் சமத்துவத்தை வளர்க்கும் வகையிலும் ஒடுக்கப்பட்டோரின் நலன் காக்கும் வகையிலும் அமைந்துள்ளனவா என்றும் பார்க்க வேண்டும். யுக்திகளும், கொள்கைகளும் ஒடுக்கப்பட்ட மக்களைப் பாகுபடுத்தும் வகையிலும் வறுமையை வளர்க்கும் வகையிலும் அமையா வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

30. நிலங்களின் விலை மதிப்பு அதிகரித்தல், ரியல் எஸ்டேட் நோக்கில் செய்யப்படும் கட்டாய வெளியேற்றத்தைத் தடுக்க அரசு உரிய நடைமுறை களை மேற்கொள்ள வேண்டும். வணிக சக்திகள், அதிக விலை என்று பல்வேறு ஏமாற்று வித்தைகளால் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த

வருவாயுடையோரை ஏமாற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நிலம் அல்லது வீடுகளின் விலை உயரும் பட்சத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது திணிக்கப்படும் அழுத்தத்திலிருந்து மக்களைக் காக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு.

31. நிலம் மற்றும் வீடு வழங்களில் முதியோர், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

32. இடம் பெயரலைக் குறைக்கும் வகையில் அரசின் திட்டங்கள் அமைய வேண்டும். அரசு முன்னெடுக்கும் எந்தத் திட்டத்தையும் துவக்கும் முன்னால், பரந்த ஆய்வு ஒன்று மேற்கொண்டு வளர்ச்சியின் பெயரில் செய்யப்படும் இத்திட்டத்தால் வெளியேற்றம் மற்றும் இடம் பெயரல் நிகழுமா என்பதனை அவதானிக்க வேண்டும். பாதிக்கப்படும் மக்கள், குழுக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுமா என்றும் தேவையாயின் மாற்று யுக்திகளும் வகுத்து சேதத்தின் அளவைக் குறைக்கலாம்.

33. சமூகத்தின் பல தரப்பினரையும் குறிப்பாகப் பெண்கள், முதியோர், ஒடுக்கப்பட்டோரை வெளியேற்றம் அதிகமாகத் தாக்கும் என்பதால் விளைவு பற்றிய ஆய்வு இதனைக் கணக்கில் கொள்ளவேண்டும். வேறுபட்ட விளைவு கள் அனைத்தும் அடையாளங் காணப்பட்டு, களைய முற்படவேண்டும்.

34. சர்வதே மனித உரிமைத் தரங்களைச் சரியாகப் பயன்படுத்தும் வகையில் வழக்குரைஞர்கள், சட்ட அமுலாக்க அதிகாரிகள், நகர மற்றும் ஊரகத் திட்ட அலுவலர்கள், வளர்ச்சிப் பணியில் செயற்படும் மேலாளர்கள், வடிவமைப்போர், நிர்வாகம் இவர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். இப்பயிற்சியில் பெண்ணுரிமைகளுக்குக் குறிப்பாகப் பெண்களின் வீடு மற்றும் நிலம் பற்றியத் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

35. வெளியேற்றம் தொடர்பான தகவல்களை, செய்திகளை, கொள்கைகளை மக்கள் அறியச் செய்ய வேண்டும். இவ்வெளியேற்றத்தால் பாதிக்கப்படவிருக்கும் நலிந்த பிரிவினர்க்கும் உரிய வழியில் செய்திகள் சென்று சேரச் செய்யவேண்டும்.

36. தனி நபர்கள், குழுக்கள், சமூகங்களை இவர்கள் வெளியேற்றத்தால் பாதிக்கப்படும் நிலையில் அவர்களின் இது தொடர்பான வழக்கு தேசிய மற்றும் சர்வதேச சட்ட அமைப்புகளின் முன் நடந்து வருகின்ற போது பாதுகாப்புக் கொடுப்பது கடமையாகிறது.

## III. வெளியேற்றத்திற்கு முந்தி

37. நகர் மற்றும் ஊரகத் திட்டம் மற்றும் வளர்ச்சி முறையில் பாதிக்கப் படுவோர் ஒருங்கிணைக்கப்பட வேண்டுவதோடு கீழ்க்கண்ட கூறுகளும் இடம் பெற வேண்டும்.

அ. வெளியேற்றத்திற்கு உள்ளாவோர்க்கு முன்கூட்டியே நடக்கப்போவது பற்றியும், நடக்கவிருக்கும் பொது விசாரணையில் கலந்து கொள்ள வேண்டுவது பற்றியும் முறையாக அறிவிக்கவேண்டும்.

ஆ. நில ஆவணங்கள் மாற்றுக் குடியிருப்புகள் நலிந்த பிரிவினரைக் காக்கும் திட்டங்கள் போன்ற செய்திகள் முறையாக மக்களுக்குத் தெரிவிக்கப் படவேண்டும்.

இ. வெளியேற்ற திட்டம் பற்றிய ஆய்வு செய்யவும் மாற்றுக் கருத்தை முன்வைக்கவும் பாதிக்கப்பட்டோர்க்கு உரிமையுண்டு.

ஈ. பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு சட்டரீதியான, தொழில்நுட்ப ரீதியான ஆலோசனை வழங்கப்படவேண்டும். அதன்மூலம் மனித உரிமைகளைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பளிக வேண்டும்.

உ. பொதுவிசாரணை-இதன் மூலம் வெளியேற்றத்தைக் கேள்வி கேட்கவும், மாற்றுத் திட்டத்தை முன் வைக்கவும் கோரிக்கைகளை முன் வைக்கவும் இவர்களுக்கு உரிமையுண்டு.

38. அரசுகள் வெளியேற்றத்திற்கு மாற்று ஒன்றினைக் காண ஆய்வு மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட குழுக்கள், நபர்கள், பெண்கள், பழங்குடியினர், மாற்றுத் திறனாளர்கள், பாதிக்கப்பட்டோர்க்காக உழைப்போர், அனைவர்க் கும் இது தொடர்பான செய்திகளை அறிய உரிமையுண்டு. இது தொடர்பாக நடக்கும் கலந்துரையாடல்கள், வெளியேற்றத் தொடர்புக்கான அனைத்து நிலைகளிலும் பங்கேற்கவும் உரிமையுண்டு. இம்முயற்சியில் சரியான மாற்று ஒன்றினை காண இயலா நிலையில் சுதந்திரமான அரசியல் சாசன அதிகாரி, நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் அல்லது சமரசம் செய்வோர் போன்றோர் மூலம் சமாதானம் செய்யலாம். அல்லது மத்தியஸ்தம் செய்யலாம்; அல்லது தீர்ப்பளிக்கலாம்.

39. வெளியேற்றத்திற்கான திட்டமிடலில், பாதிக்கப்பட்டோர் அனைவரையும் உரையாடலில் கலந்துகொள்ள வகை செய்ய வேண்டும். இவர்களில் பெண்கள், நலிந்த பிரிவினர், ஒதுக்கப்பட்ட மக்கள், தேவையேற் பட்டால் புதிய நடவடிக்கைகளை ஏற்பது மூலமும் செய்ய முடியும்.

40. வெளியேற்ற நடவடிக்கைகளுக்கு முந்தி அதிகாரிகள், வெளியேற்றப் படவிருக்கும் மக்களிடம் இவ்வெளியேற்றம் ஏன் தவிர்க்க முடியாதது என்றும், இவ்வெளியேற்றங்கள் சர்வதேச மனித உரிமைகள் அடிப்படையில் பொது நன்மை கருதியே செய்யப்படுகிறது என்பதனையும் எடுத்துரைக்க வேண்டும்.

41. வெளியேற்றத்திற்கான முடிவை மக்கள் அறியும் வண்ணம் அவர்தம் மொழியில் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். இம்முயற்சிக்கான தீர்மானம் இவ்வறிக்கையில் தெளிவாக இருத்தல் நலம். அ.) வேறுவழியின் மையால் இம்முடிவு எடுக்கப்பட்டது. ஆ.) மாற்று ஏற்பாட்டின் முழுவிளக்கம். இ.) மாற்று வழி இல்லா நிலையில் வெளியேற்றத்தினால் ஏற்படும் விளைவு களைக் குறைக்க வழிகாணல், அனைத்து முடிவுகளும் நிர்வாகம் மற்றும் சட்டத்துறை ஆய்வுக்குட்பட்டே செய்யப்படும். பாதிக்கப்பட்டோர், சட்டரீதியான உதவியை நாட எவ்வித கட்டணமுமின்றி அனுமதித்தல்.

42. வெளியேற்றத்திற்கான அறிவிப்பின்போது, வெளியேற்றப்படப் போகும் வீடு அல்லது நிலத்தில் ஏற்கனவே இருக்கின்ற பொருட்கள், சொத்துக்கள் விவரப்பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். இச்சொத்து/ பொருட்களை மதிப்பிடவும் இப்பொருட்களின் சேதத்தை அளவிடவும் இது உதவும். பாதிப்புக்குள்ளாவோர்களின் பணமல்லாதப் பொருட்களின் இழப்பையும் கணக்கிட்டு, நஷ்ட ஈடாக வழங்க வேண்டும்.

43. வெளியேற்றம் தனிமனிதர்களை வீடற்றவர்களாகவோ, ஏனைய மனித உரிமை மீறல்களுக்கு ஆட்படுபவர்களாகவோ மாற்றிவிடக்கூடாது. அரசு, வெளியேற்றப்பட்டவர்களுக்குக் குறிப்பாக மாற்றுவழி அறியா தோர்க்கு மறுகுடியிருப்பு, விளைநிலம் போன்றவற்றைக் கட்டாயம் உறுதி செய்ய வேண்டும். மாற்றாக கொடுக்கப்படும் வீடுகளும் வாழிட வசதிகளும் அவர்கள் ஏற்கனவே குடியிருந்த வீடுகளின் அருகில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

44. வீடுகள் கட்டுதல், நீர்வசதி, மின்சாரம், சுகாதாரம், பள்ளிகள், சாலை வசதி, நிலம் ஒதுக்கீடு போன்ற மாற்று குடியிருப்புக்கான வசதிகள் அனைத்தும் இங்கே தரப்படும் வழிகாட்டுதல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைக் கொள்கைகள், அடிப்படையில் அமைதலோடு இவ்வசதிகள் இவர்கள் ஏற்கனவே வாழ்ந்த உறைவிடத்தைவிட்டு வெளியேறு முன்பே செய்து தரப்பட வேண்டும்.

## IV. வெளியேற்றத்தின்போது

45. மனித உரிமைகளை மதித்தல் எனும் சர்வதேச தரத்தின்படி, வெளியேற்ற நடவடிக்கையின்போது, அரசதிகாரிகள் அவ்விடத்தில் கட்டாயம் இருக்க வேண்டும். அரசதிகாரிகள், அவர்தம் பிரதிநிதிகள், ஏனையோர் தாம் யார் என்ற அடையாளத்தையும், வெளியேற்றப்படுவோர்க்குச் சொல்ல வேண்டும்.

46. மேற்கண்ட அரசதிகாரிகளைத் தவிர்த்து நடுநிலை சார்ந்த அதிகாரி களும் அதாவது தேசிய அல்லது சர்வதேச பார்வையாளர்களும் இடம் பெறலாம். சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கு ஏற்ப இவ்வெளியேற் றங்கள் நடக்கிறதா என்பதைக் கண்காணிக்க, இச்செயற்பாட்டில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும் இது உதவும்.

47. மனித மாண்புகளையும், மனித உரிமைகளையும் மீறுவதாகவோ பாதிக்கப்பட்டோரின் பாதுகாப்பைச் சேதப்படுத்துவதாகவோ வெளியேற்ற நடவடிக்கைகள் அமைதல் கூடாது. குறிப்பாகப் பெண்கள் பாலியல் ரீதியான பாகுபாட்டிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வதோடு, குழந்தைகளின் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.

48. வெளியேற்றத்தின் போது சட்டப்படியான ஆயுதப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தால் தேவை அளவு மற்றும் ஆயுதப் பிரயோகத்திற்கான கோட்பாடுகளின் அடிப்படையில்தான் அமைய வேண்டும். ஆயுத நடவடிக் கைகள் சர்வதேசச் சட்ட அமுலாக்கம் மற்றும் மனித உரிமைத் தரங்களின் அடிப்படையில் அமைய வேண்டும்.

49. மோசமான காலநிலை, திருவிழாக் காலங்கள், மத விழாக்கள் தொடர்பான விடுமுறை நாட்கள், தேர்தலுக்கு முந்திய நாள், பள்ளித் தேர்வு நாட்களில் நடத்தப்படக் கூடாது.

50. அரசுகளும் அரசுகளின் முகவர்களும் வெளியேற்றத்தின் போது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடாமலிருக்க உத்திரவாதமளிக்கப்பட வேண்டும். குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது வன்முறை பிரயோகிப்பதும், தன்னிச்சையாகச் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதும், சொத்துக்களை அழிப்பதும் ஏனைய வடிவிலான அழிவுகளைச் செய்வதும் கூட்டுத் தண்டனை வழங்குவதும் தவிர்க்கப் பெறல் வேண்டும். வெளியேற்றத்தின் போது கைவிடப்பட்ட சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இச்சொத்துக்கள் அழிக்கப்படவோ, அபகரிக்கப்படவோ அல்லது பயன்படுத்தப்படவோ கூடாது.

51. வெளியேற்றப்பட்டவர்களின் சொத்துக்களை அல்லது கட்டிடங்களை எந்தக் காரணம் கொண்டும் அதிகாரிகள் அழித்துவிட கூறக்கூடாது. வெளியேற்றப்பட்டபின் எஞ்சிய சொத்துக்களை என்ன செய்ய வேண்டும் என்கிற முடிவைப் பாதிக்கப்பட்டவரிடமே விட்டுவிடவேண்டும்.

## V. வெளியேற்றத்தின் பின்: நிவாரணமும் மீள் குடியேற்றமும்

52. இழப்பீடு மற்றும் மாற்று வாழும் வசதிகளும் செய்ய வேண்டிய அரசாங்கமும் ஏனைய நபர்களும் வெளியேற்றம் நடக்கும்போதே நடைமுறைப்படுத்த வேண்டும். கட்டாய வெளியேற்றத்தின்போது இந்நடைமுறை சாத்தியமில்லை. குறைந்த அளவிலாவது செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளை தமக்கென மாற்று ஏற்பாடுகளை செய்ய முடியாத நபர்களுக்கு குழுக்களுக்கு எவ்வித பாகுபாடுமின்றி செய்தாக வேண்டும். இவர்களுக்கு அ.) அவசியமான உணவு, தண்ணீர், சுகாதார வசதி, ஆ.) அடிப்படை உறைவிடம் அல்லது வீடு, இ.) பொருத்தமான உடை, ஈ.) மருத்துவ வசதி, எ.) வாழ்வாதாரம், ஏ.) கால்நடைகளுக்கான தீவனம், ஏற்கனவே வருவாயளித்த பொதுச் சொத்தினைப் பயன்படுத்துதல் ஐ.) குழந்தைகளுக்கான கல்வி வசதியளித்தல் ஏற்கனவே இணைந்து வாழ்ந்த குடும்பத்தினர் பிரிந்துவிடாமல் பார்த்துக் கொள்ளல்.

53. சேவை அல்லது பொருட்களை விநியோகிப்பதிலும் திட்டம் பற்றிய விவாதங்களிலும் பெண்களின் சம பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

54. காயம், சுகவீனம், ஊனம் போன்ற இயலாமைகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டும். இவ்வுதவிகள் எவ்வித பாகுபாடுமின்றி அனைவர்க்கும் தரப்படல் வேண்டும். வெளியேற் றத்தின்போது, பாதிக்கப்பட்டோர்க்கு உளவியல் ரீதியான ஆலோசனைகள் தேவையெனில் அதுவும் வழங்கப்பெற வேண்டும்.

அ.) பெண்கள் மற்றும் குழந்தைகளின் மருத்துவ தேவைகளுக்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். பாலியல் பலாத்காரத்திற்கு ஆட்பட் டோர்க்குரிய உளவியல் ஆற்றுப்படுத்து சேவை பெண்களுக்கு கிடைக்கப் பெற வேண்டும்.

ஆ.) வெளியேற்றம் அல்லது மறுகுடியேற்றம் காரணமாக மருத்துவ வசதி யாருக்கும் மறுக்கப்படல் கூடாது

இ.) தொற்றுநோய் அல்லது கொடிய *HIV/AIDS* போன்ற நோய் தொற்றியவர்களுக்கு மறு குடியேற்றத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

55. அடையாளப்படுத்தப்பட்ட மறுகுடியேற்ற இடங்கள் போதுமான உறைவிட உரிமைகளைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். சர்தேச மனித உரிமை தரங்களையும் காப்பதாக அமைய வேண்டும். (அ) பாதுகாப்புக் காலம் (ஆ) சேவைகள், பொருட்கள், வசதிகள், உட்கட்டுமான வசதிகளான தண்ணீர், சமையலுக்கான எரிபொருள், சூடேற்றல், விளக்கு, சுகாதாரம், சலவை வசதி, உணவு பாதுகாப்பு, குப்பைகளை அகற்றல், கழிவுநீர்க் கால்வாய், அவசரகால சேவைகள், பொதுவான உபயோகப் பொருட்கள் (இ) வாழ்வதற்குரிய வீடுகள் (ஈ) வாழ்வதற்குரிய வீடுகள் என்றால் வீட்டைச் சுற்றி வெளியிடங்கள், குளிர், மழை, காற்று நலவாழ்விற்குத் தீங்கு விளைவிக்கும் ஏனைய அடிப்படை ஆபத்துகள் வீட்டில் உறைபவரின் உடல்ரீதியான பாதுகாப்பு (உ) ஒடுக்கப்பட்டோர் எளிதில் அணுகும் வாய்ப்பு (ஊ) வேலை வாய்ப்பு, மருத்துவ சேவை வசதிகள், பள்ளிகள், குழந்தை பாதுகாப்பு மையங்கள், மற்றைய சமூக வசதிகள் நகர் மற்றும் ஊரகத்தில் வாழ்வோர்க் குப் பாகுபாடற்ற வசதிகள் (ஏ) கலாச்சாரச் சூழமைவுள்ள வீடுகள், போது மான உறைவிட உரிமை என்பன கீழ்க்கண்ட வசதிகளையும் உள்ளடக்கி யிருக்க வேண்டும். அந்தரங்கம், பாதுகாப்பு முடிவெடுப்பதில் பங்கேற்பு, வன்முறையிலிருந்து விடுதலை, நிவாரணம் பெறும் வாய்ப்பும் வேண்டும்

56. தரப்பட்டிருக்கும் வழிகாட்டுதல்களின்படி, மறுகுடியேற்றம் கீழ்கண்ட வரையறைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

அ. மறுகுடியிருப்பு, தரப்பட்டிருக்கும் வழிகாட்டுதல்களின் அடிப்படை யிலும் சர்வதேச மனித உரிமை கொள்கைகளின் அடிப்படையிலும் அமைய வேண்டும்.

ஆ. மறுகுடியிருப்பின்போது பெண்கள், குழந்தைகள், பழங்குடிகள் மற்றும் ஏனைய நலிந்த பிரிவினரின் மனித உரிமைகளை சமமாகப் பாதுகாக்க உத்தரவாதம் அளிக்கப் பெறல் வேண்டும்.

இ. மறுகுடியிருப்பை நடைமுறைப்படுத்துவோர் மறுகுடியிருப்பின்போது சட்டப்பூர்வமாக ஏற்க வேண்டிய செலவினங்களையும் ஏற்க வேண்டும்.

ஈ. பாதிக்கப்படும் நபர்கள், குழுக்கள், சமூகங்கள் எவரும் மனித உரிமை களை எவ்வித தடையுமின்றி அனுபவிக்கும் வகை காணல் வேண்டும். இவர் களின் வாழ்க்கை நெடுகிலும் இவர்களின் வாழ்க்கைத் தரத்தை யாரும் நசுக்காவண்ணம் பார்த்துக் கொள்ளல் அவசியம். இது மறுகுடியேற்றத்தின் முன்னே அங்கிருந்த சமூகத்திற்கும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் குழுக் களுக்கும் சமூகத்திற்கும் பொருந்தும்.

உ. பாதிக்கப்பெறும் நபர்கள், குழுக்கள், சமூகங்களிடம் மறுகுடியிருப்பு பற்றி தெரிவித்து அவர்களிடம் உரிய சம்மதம் பெற்றிருக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட இடத்தில் அரசுகள் அனைத்து வசதிகள், பொருளாதார வாய்ப்புகள் அனைத்தும் செய்து தரப்பட வேண்டும்.

ஊ. மறுகுடியிருப்பில் வாழ்வோர்தம் போக்குவரத்துச் செலவு, பணியிடத் திலிருந்து குடியிருப்புக்குச் சென்றுவரும் நேரம், முக்கிய சேவைகளைப் பெறும் வாய்ப்பு போன்றவைகள் குறைந்த வருவாய் உள்ள மக்களைப் பாதிக்காமலிருக்க உத்தரவாதம் வேண்டும்.

எ. மறுகுடியிருப்புகள் சுற்றுப்புறச்சூழல் மாசுபடிந்த இடத்தில் இருக்கக் கூடாது. சுற்றுப்புறச் சூழல் மாசுபட்டிருக்குமானால் இச்சூழல் குடியிருப் போரின் மனநலன் மற்றும் உடல் நலனையும் பாதிக்கும்.

ஏ. மறுகுடியிருப்பு தொடர்பான அரசின் திட்டங்கள் அமுலாக்க நடைமுறைகள் வெளியேற்றத்திற்கான நோக்கம் அனைத்தும் பாதிக்கப்படும் மக்களுக்கு, குழுக்களுக்கு, சமூகங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். சிறுபான்மையோர், பழங்குடி மக்கள், நிலமற்றோர், பெண்கள், குழந்தைகள் இதில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும்.

ஐ. மறுகுடியிருப்பின் அனைத்து நிலைகளிலும் பாதிக்கப்பட்டோர், குழுக்கள், சமூகங்களின் பங்கேற்பு வேண்டும். மாற்றுத் திட்டங்கள் பற்றி பாதிக்கப்பட்டோர், குழுக்கள், சமூகங்கள் தரும் ஆலோசனைகளைக் கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒ. பொதுவிசாரணையின் பின் மறுகுடியிருப்பு விஷயத்தில் இன்னும் செய்ய வேண்டியதிருப்பது உள்ளது என்று கருதினால் பாதிக்கப்பட்டோர், குழுக்கள், சமூகங்களுக்குத் தம் கருத்துக்களை முன்வைக்க வெளியேற்றத்தின் முன் குறைந்தது 90 நாட்களாவது கொடுக்கப் பெறல் வேண்டும்.

ஓ. உள்ளாட்சியின் அலுவலர்கள், நடுநிலை பார்வையாளர்கள் என அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் மறுகுடியிருப்பின்போது உடனிருக்க வேண்டும். பலவந்தமாகவோ வன்முறையைப் பிரயோகித்தோ மக்களை வெளியேற்றல் இதன்மூலம் தடுக்கப்படும்.

57. மறுவாழ்வுக் கொள்கைகள் பெண்கள், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் நலிந்த பிரிவினர்க்கு ஏற்ப வடிவமைக்கப்பட வேண்டும். போதுமான உறைவிட வசதி, உணவு, தண்ணீர், சுகாதாரம், கல்வி, வேலை, பாதுகாப்பு, வீட்டுப் பாதுகாப்பு, கொடூரத்திலிருந்து விடுதலை, மனிதாபிமானமற்ற முறையில் நடத்துதலிலிருந்து விடுதலை, நடமாடும் உரிமை இவ்வுரிமை களை சமமாக துய்க்கும் உரிமை வேண்டும்.

58. வெளியேற்றத்தால் பாதிக்கப்படும் மனிதர்கள், குழுக்கள், சமூகங்கள் தங்கள் மனித உரிமைகளை இழந்துவிடக் கூடாது. குறிப்பாகப் போதுமான உறைவிட உரிமையை இழந்துவிடலாகாது. இவ்வுரிமைகளே ஏற்கனவே மறுகுடியிருப்பில் வாழ்வோர்க்கும் பொருந்தும்.

## VI. கட்டாய வெளியேற்றங்களும் நிவாரணமும்

59. வெளியேற்றத்தால் அச்சுறுத்தப்பட்டோர் மற்றும் பாதிக்கப்பட்டோர் அனைவரும் உரிய நிவாரணம் பெற உரிமையுடையவர்களாவர். சட்டரீதியான உதவி, சட்ட ஆலோசனை, மீட்டளிப்பு, மறுகுடியிருப்பு, மறுவாழ்வு, நஷ்டஈடு என்பன பாதிக்கப்பட்டோர் பெற உரிமையுண்டு. இந்த வழிகாட்டுதல்கள், சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், சர்வதேச மனிதாபிமான சட்டம் அனைத்தின் விதிகளுக்கேற்ப நிவாரணங்கள் அமைய வேண்டும்.

### அ. இழப்பீடு

60. மக்கள் நலன் கருதி தவிர்க்க இயலாத சூழலில், வெளியேற்றம் தேவையாகுமெனில் பாதிக்கப்பட்டோரின் இழப்பைச் சரிக்கட்டும் வகையில் இழப்பீடு வழங்கப்பெற வேண்டும். பொருளாதார ரீதியான அனைத்து இழப்புகளுக்கும், மீறலின் அளவுக்கேற்பவும், இழப்பு நடந்த சூழலுக்கேற்பவும் நஷ்டஈடு அமைய வேண்டும். எடுத்துக்காட்டாக இறந்துபோதல், உடல் உறுப்புகளை இழத்தல், உடல் அல்லது உள்ள அளவிலான சேதம், வேலை வாய்ப்பு, கல்வி சமூகப் பயன்கள் இழப்புகள், பொருள் சார்ந்த சேதங்கள், பொருள் ஈட்டும் திறனிழத்தல், ஒழுக்கச் சிதைவு, சட்ட உதவி கோரலில் ஏற்பட்ட பொருளாதார இழப்பு, மருத்துவச் செலவு, மனநலம் மற்றும் சமூக சேவைகள், பணமாகக் கொடுக்கும் இழப்பீடு நிலம் மற்றும் பொதுச் சொத்துக்கு மாற்றாக இருத்தல் கூடாது, ஒருவரின் நிலம் பறிக்கப்பட்டால் அதே அளவு தரம், அளவு, மதிப்புடைய நிலமே மாற்றாக அமைய வேண்டும்.

61.ஒருவர் நிலத்தின் சாசனம் பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும், வெளியேற்றத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால் இழப்பீடு பெறத் தகுதியுடையவரே. சொத்திழப்பு, சொத்துக்களை இடமாற்றம் செய்யும்போது ஏற்படும் பாதிப்பு சேதமடைதல் போன்றனவெல்லாம் இழப்பீடு பெறலுக்குத் தகுதியுடைமையே. முறையற்ற வாழிடங்களான சேரிகள் அல்லது தற்காலிக குடியிருப்புகளின் இழப்பீடு பற்றியும் இங்கு கவனம் செலுத்த வேண்டும்.

62. ஆண், பெண் எனும் இருபாலாரும் சம அளவில் இழப்பீட்டை பெறும் தகுதியுடையரே. தனியாக வாழும் பெண் அல்லது விதவைகளும் இழப்பீடு பெற தகுதியுடையரே.

63. உதவி எனும் வரையறைக்குள் மறுகுடியமர்வு வராதபோது, பொருளாதார இழப்பில் மொத்த இழப்பை மற்றும் மொத்தச் செலவை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, வீடு கட்டப்படும் நிலப்பகுதி வீட்டமைப்பு, பொருட்கள், உட்கட்டமைப்பு, அடமானம் அல்லது கடனுக்கான அபராதம், இடைக்கால உறைவிடம், நிர்வாக மற்றும் சட்டரீதியான சம்பளம் இழந்த சம்பளங்கள் மற்றும் வருமானம், இழந்த கல்வி வாய்ப்புகள், மருத்துவச் செலவு மறுகுடியமர்வு போக்குவரத்து செலவினம் வெளியேற்றப்பட்டவர்க்கு வீடும் அதைச் சார்ந்த நிலமும் வாழ் வாதாரமாக இருந்தால் இழப்பு பற்றிய கணிப்பில் வணிக இழப்பு, இருக்கும் பொருட்களின் பட்டியல், ஆடுமாடுகள், நிலம், மரங்கள், பயிர்கள், குறைந்த சம்பளம் மற்றும் வருமானத்தையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

## ஆ. மீட்டளிப்பும் திரும்பச் செய்தலும் *(return)*

64. வெளியேற்றம் பொதுவாக வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படையிலும் உட்கட்டுமான திட்டங்களின் அடிப்படையில் அமையும் போது மீட்டளிப்புக்கும் திருப்பலுக்கும் அனுமதிப்பதில்லை என்றாலும் சூழ்நிலை அனுமதிக்கும் போது அரசுகள் மக்கள், குழுக்கள், சமூகங்கள் வெளியேற்றப்படுகையில் இவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். குழுக்கள், தனி மனிதர்கள், சமூகங்களை அவர்கள் விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயப்படுத்தி அவர்கள் வீட்டுக்கு அல்லது நிலத்திற்கு கட்டாயமாகத் திரும்ப கட்டாயப்படுத்தக்கூடாது.

65. வீடு திரும்புதல் சாத்தியமாகும்போது அல்லது வழிகாட்டு நெறிகளுக்கு ஏற்ப மறு குடியிருப்பு மறுக்கப்படுகின்ற போது, அதிகாரிகள் நிபந்தனைகளை உருவாக்கி நிதியுதவி, மற்றும் பாதுகாப்பளித்து மாண்போடும் மரியாதையோடும் அவர்கள் தாமாகவே தம் சொந்த இடம் அல்லது வீடுகளுக்குத் திரும்பும் வாய்ப்பளித்தல் வேண்டும். பொறுப்புள்ள அதிகாரி கள், இவ்வாறு திரும்பிய குழுக்கள், தனிமனிதர்கள், சமூகங்கள் தாம் வாழ்ந்த சமூகங்களோடு ஒருங்கிணைய பார்த்துக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் முழுமையாகப் பங்கேற்கவும், திட்டமிடவும், திரும்பும் முறையில் இணையவும் வேண்டும். இந்த முறையில் பெண்ககளின் முழுமையானப் பங்கேற்பை உத்தரவாதப் படுத்த வேண்டும். இதன் மூலம் ஏற்கனவே வீடு, சமூகம், நிறுவனம், நிர்வாகம், சட்டம் பால் பாகுபாடுகள் மூலம் பெண்களை ஒதுக்கலும் பாகுபாடும் குறையும்.

66. தனிமனிதர்கள், குழுக்கள், சமூகங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புகையில் ஏற்கனவே வெளியேற்றம் நடந்தபோது விட்டுவிட்ட பொருட்கள் மீட்டெடுத்தார்களா என்பதைக் கண்காணித்து உதவும் கடமை உரிய அதிகாரிகளுக்கு உண்டு.

67. திரும்பிய பிறகு தம் உடமைகளை மீட்டெடுக்க முடியா நிலையில், உரிய அதிகாரிகள், வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டோர்க்கு உரிய நிவாரணம் அல்லது இழப்பீடு பெற்றுத்தர வேண்டும்.

## இ. மறுகுடியமர்வும் மறுவாழ்வும்

68. அனைத்துப் பிரிவினருமே திரும்புவதற்கான உரிமைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். சில சூழல்கள் (பொதுநலனைப் பாதுகாத்தல், ஆரோக்கியம் அல்லது மனித உரிமைகளைத் துய்த்தல்) சில தனிமனிதர்கள், குழுக்கள், சமூகங்களை மறுகுடியமர்த்தலுக்கான தேவை வளர்ச்சியொட்டிய வெளியேற்றங்களால் உருவாகிறது. இம்மாதிரியான மறு குடியமர்வு நீதி அடிப்படையிலும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் அடிப்படையிலும் இந்த வழிகாட்டுதல்களின் பிரிவு 5ன் படியும் அமைய வேண்டும்.

## VII. கண்காணிப்பு, திறனாய்வு, தொடர் செயற்பாடுகள்

69. அரசுகள் வெளியேற்றத்தின் விளைவுகளைக் கண்காணிக்கவும் தர ரீதியாகவும் அளவு ரீதியாகவும் உடனடி அல்லது நீண்டகால விளைவுகளைத் திறனாய்வு செய்தல் வேண்டும். இத்திறனாய்வு எண்ணிக்கையைக் கண்டறி யவும் அவைகளின் எத்தனை வகை என்றும், எந்த ஆட்சியெல்லையில் என்றும், எந்தப் பகுதியென்றும் திறனாய்வு செய்தல் வேண்டும். கண்காணிப்பு மற்றும் கண்டறிந்த அறிக்கைகளின் உண்மையை மக்கள் அறியச் செய்ய வேண்டும். இதோடு சர்வதேச அளவிலான குழுக்களுக்கும் அறியச் செய்தல் வேண்டும். இதன் மூலம் வெளியேற்றலில் கடைபிடிக்கப் படும் நல்ல பழக்கங்களை உலகறியச் செய்தலும் கற்ற பாடங்கள் மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க உதவவும் பயன்படுத்துதல்

70. அரசுகள் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் போல் சுதந்திர மான அமைப்பொன்றை உருவாக்கி வெளியேற்றத்தைக் கண்காணிக்கவும் விசாரிக்கவும் தரப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## VIII. சர்வதேச சமூகம் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பங்கு

71. உறைவிடம் மற்றும் நிலம், சொத்துரிமைகளை வளர்க்கவும் பாதுகாக்கவும் சர்வதேச சமூகங்களுக்குக் கடமையுண்டு. சர்வதேச நிதி, வணிகம், வளர்ச்சி மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள், முகமைகள் உறுப் பினர் அல்லது நிதிநல்கும் அரசுகள் இவைகளுக்கெல்லாம் வாக்களிக்கும் உரிமை இருப்பதால், கட்டாய வெளியேற்றத்தைத் தடுக்கும் முயற்சியை சர்வ தேச மனித உரிமைச் சட்டங்களின்படியும் தொடர்புடைய தரங்களின் அடிப் படையிலும் செய்ய வேண்டும்.

72. சர்வதேச அமைப்புகள், கட்டாய வெளியேற்ற வழக்குகளை விசாரிக்க புகார் பெறும் அமைப்பொன்றை உருவாக்க வேண்டும். சட்ட ரீதியான நிவாரண உதவிகளைப் பாதிக்கப்பட்டோருக்கு இவ்வழிகாட்டுதல் களின்படி வழங்க வேண்டும்.

73. பன்னாட்டு நிறுவனங்களும் ஏனைய வணிக நிறுவனங்களும் வீட்டுரிமைக்கான மனித உரிமைகளை மதிக்க வேண்டும். வீட்டுரிமை களோடு கட்டாய வெளியேற்றத்தைத் தங்கள் பணி நடக்கும் பகுதிகளில் தடை செய்தல் வேண்டும்.

## IX. கருத்து விளக்கம்

74. வளர்ச்சி அடிப்படையிலான வெளியேற்றம், இடப்பெயர்வு பற்றிய இவ்வழிகாட்டுதல்கள், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள், அகதிகள், மனிதாபிமான சட்டம், தொடர்புடைய தரங்கள் அல்லது இச்சட்டங்களோடு ஒத்த உரிமைகள், தரங்கள் இவைகளின் முக்கியத்துவத்தை குறைக்க, சிதைக்க அல்லது முன் தீர்மானக் கருத்தை வளர்க்கவோ அல்ல. இவ்விளக்கம் தேசியச் சட்டங்களுக்கும் பொருந்தும்.

# இறுதிக் குறிப்புகள்

1. உறைவிட வசதி குறித்த அய்.நாவின் சிறப்பு அறிக்கையாளர் அறிக்கை; மிலூன் கோத்தாரி *E/CN.4/2006/41*, 21 மார்ச் 2006

2. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை நகர்ப்புற உறைவிடத்திற்கான செயற்பாட்டுக் குழு வீடு மற்றும் வறுமை ஒழிப்பு இந்திய அரசு

3. தேசிய நகர்புறப் உறைவிடக் கொள்கை 2007 - இந்திய அரசு

4. உறைவிடத்திற்கான செயற்பாட்டுக் குழுவின் பதினொன்றாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கை-ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம்-இந்திய அரசு

5. பல்வேறு உச்சநீதிமன்ற தீர்ப்புகள். பிரான்சிஸ் கரோலின் முல்லின் எதிர் யூனியன் பிரதேசம் டெல்லி *(1981)* ஓல்கா டெல்லிஸ் எதிர் மும்பை நகராட்சி [*(1985) (3CC 545)*] சாந்திஸ்டார் பில்டர்ஸ் எதிர் நாராயண் கிமலால் டொடாமே (1990) *(1 SCC 520)* சாமலி சிங் எதிர் உ.பி அரசு (1996) [*2 SCC 549]* சர்வதேச சட்டங்களையும் ஒப்பந்தங்களையும் உறுதிசெய்த தீர்ப்புகள்; கிராமபோன் கம்பெனி எதிர் வி.பி. பாண்டே *(1984) (2 SCC 534) CERC* எதிர் இந்திய அரசு [*(1995) 3SCC 42* ]மதுகிஷ்வர் எதிர் பீகார் அரசு [*(1996) 5 SCC 125*] மற்றும் மக்கள் சிவில் உரிமைக் கழகம் எதிர் இந்திய அரசு [*(1997) 3 SCC 433*]

6. பொதுக் கருத்துரை 4, போதுமான உறைவிடத்திற்கான உரிமை (பிரிவு 11 (1) சி) பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான குழு 1991 ஆறாவது அமர்வு பத்திகள் 7, 8

7. உறைவிடம் மற்றும் நிலவுரிமைக்கான கூட்டுப்பணி உள்ளடக்கும் *(www.hlrn.org)* அய்.நாவின் வீட்டுரிமைக்கான சிறப்பு அறிக்கையாளர் *(http://www.ohchr.org/english/issues/housing/index.htm)*, குறிப்பாக பார்க்க - வினா நிரல் *Annex 3, A/HRC/4/18, February 2007. http://daccessdds.un.org/doc/UNDOC/GEN/G07/106/28/PDF/G0710628.pdf?OpenElement)*

8. பொதுக் கருத்துரை 7: போதுமான உறையுள் உரிமை (பிரிவு 11.1 உடன்படிக்கை) கட்டாய வெளியேற்றம், பொருளாதார சமூக, கலாச்சார உரிமைகள் 1957 16வது அமர்வு பத்தி 3

9. அய்.நாவின் வீட்டுரிமைக்கான சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. மிலூன் கோத்தாரி *A/HRC/4/18* பெப்ருவரி 2007-*http://www2.ohchr.org/english/issues/housing/annual.htm*

10. மனித உரிமை கவுன்சிலின் தீர்மானம் *6/27, A/HRC/6/L.11/Add.1, 19 December 2007. http://ap.ohchr.org/documents/E/HRC/resolutions/A_HRC_RES_6_27.pdf*

## மக்கள் கண்காணிப்பகம்

மக்கள் கண்காணிப்பகம் எங்கெல்லாம் மனித உரிமை மீறல்கள் நடைபெறுகிறதோ, அவ்விடங்களுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு உண்மை நிலைகளைக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் மாநில, தேசிய, சர்வ தேசிய மனித உரிமை ஆணையங்களுக்கும், சட்ட அமைப்புகளுக்கும் அரசின் கவனத்திற்கும் மனித உரிமை மீறல்களின் வடிவங்களையும் தன்மைகளையும், எடுத்துச்சென்று உரிய தலையீடுகள் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுத் தருகின்ற பணியினைச் செய்து வருகின்றது.

தமிழ்நாட்டின் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இந்நிறுவனத்தின் மனித உரிமைக் கல்வி நிறுவனம், மனித உரிமை கலாச்சாரத்தை வளர்க்கும் வகையில் இந்தியாவின் 16க்கும் மேற்பட்ட மாநிலங்களில் மனித உரிமைக் கல்வியைப் பள்ளிகளில் கொண்டு செல்கிறது.

*(www.peopleswatch.org)*

## உறைவிடம் மற்றும் நிலவுரிமைக்கான கூட்டுப் பணி

இவ்வமைப்பு, சர்வதேச அளவில் உறைவிடம் மற்றும் நிலவுரிமைகளைக் காக்கவும், வளர்க்கவும், அங்கீகரிக்கவும் பணியாற்றி வருகிறது. இப்பணிமூலம் தனிமனிதர்களும் சமூகமும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களும் தாம் வாழ்வதற்கான பாதுகாப்புடைய வாழிடங்களை அமைத்துக் கொண்டு அமைதியாகவும் மாண்போடும் வாழ வகை செய்கிறது. இவ்வமைப்பு உறைவிடம், நிலம், சொத்துரிமைகளில் பெண்கள் சமத்துவம் பெற முன்னுரிமை கொடுக்கிறது. வழக்காடல், ஆராய்ச்சி, மனித உரிமைக் கல்வி மற்றும் கூட்டுச் செயற்பாடுகள் மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தன் செயற்பாட்டை விரித்துள்ளது.

*(www.hic-sarp.org / www.hlrn.org)*

## ஒற்றுமை மற்றும் தன்னார்வச் செயற்பாட்டுக்கான இளைஞர்கள்

1984ல் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு, மனித உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்கள் அனைத்து வாய்ப்புக்களையும் பெறுவதற்காகவும் அர்ப்பணவுணர்வோடு செயற்பட்டு வரும் அமைப்பு. நலிந்த பிரிவினர் பாதுகாப்போடும் மாண்போடும் வாழும் வகையில், வறியோரை அதிகாரப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களோடு தோழமை கொண்டு செயற்படுகிறது.

*(www.yuvaindia.org)*

உறைவிடத்திற்கான உரிமையென்பது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மனித உரிமையாகும். இவ்வுரிமை மானுடரின் வாழ்வுரிமை, நிலத்திற்கான உரிமை, உணவு, வேலை, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் வீட்டுரிமைகளோடு பிரிக்கவியலா இணைந்த உரிமைகளாகும். உலக மக்கள் தொகையில் பாதிபேர் இவ்வுரிமை மறுக்கப்பட்டவர்களாக உள்ளனர் என்பதே யதார்த்தம்.

இன்று உறைவிட உரிமை கட்டாய வெளியேற்ற நடவடிக்கையால் பெரும் கேள்விக்குள்ளாகியுள்ளது. இந்தியாவில் புதிய உட்கட்டுமான வளர்ச்சியாக நகர் புனரமைப்பு, நகர் விரிவாக்கம், நகரை அழகுப்படுத்துதல், விளையாட்டு நிகழ்வுகள், தொழில் வளர்ச்சி என்பன பெயரால் கட்டாய வெளியேற்றங்கள் நிகழ்கின்றன.

கட்டாய வெளியேற்றத்தால் மக்கள் வீடுகளை இழப்பதோடு அனாதைகளாகின்றனர். வாழ்வாதாரங்களை இழந்துள்ள இவர்கள் சட்ட ரீதியான பாதுகாப்பினைப் பெறவும் வாய்ப்பற்றவர்களாயுள்ளனர். கட்டாய வெளியேற்றம் சமூகத்தின் நலிந்த பிரிவினரான பெண்கள், குழந்தைகள், வறியோர், பழங்குடியினர், சிறுபான்மையோர் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளை மிக மோசமாகப் பாதிக்கின்றன.

இக்கையேடு அய்க்கிய நாட்டு அவையின் வளர்ச்சி தொடர்பான வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு பற்றிய அடிப்படைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை அப்படியே தருவதோடு, இதன் தொகுப்புரையையும் தந்துள்ளது. 2007ல் அய்நாவின் உறைவிட உரிமைக்கான சிறப்பு அறிக்கையாளர் அய்நாவில் சமர்ப்பித்த அறிக்கையே கையேடாக வெளி வருகிறது. இவ்வழிகாட்டுதல்கள், இடப்பெயர்வை இயன்றவாறெல்லாம் குறைக்கவும் மக்களுக்கு நிலைத்த மாற்று ஏற்பாடுகளைக் காணவும் வழி காட்டுகின்றன. தவிர்க்க இயலா நிலையில், மனித உரிமைகளுக்கும் தரங்களுக்கும் பங்கம் வராமலும் மக்கள் மாண்பை மதிக்கும் வகையிலும் சில சில வரையறைக்குள் செயற்பட உதவுகின்றன.

இடம்பெயரல், மறுவாழ்வு தொடர்பான பல்வேறு நற்பண்புகளையும் கொள்கைகளையும் வகுக்கும் வகையிலும், இடம் பெயர்ந்த மக்களுக்கும், இடம் பெயர அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கும் குடிமைச் சமூகத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக செயற்படுவோர்க்கும் விழிப்புணர்வைக் கொடுப்பதோடு போதுமான உறைவிடத்திற்கான தரத்தை உருவாக்கவும் அரசு மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகளிடம் பதில் சொல்லும் கடப்பாட்டை வளர்க்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்டுள்ளது.